



# ஞானச்சுடர்

கார்த்திகை

## மலர் 2005

ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ




## குறள் வழி

**அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை.**

**பொருள்—** ஒருவன் இல்லாத விடத்தில் அவனைப் புறங்கூறி அவனைக் கண்டவிடத்துப் பொய்யாக அவனைப் புகழ்தல் அறத்தைக் கெடுத்துப் பாவம் செய்தலினும் தீமையுடையதாகும்.

(182)



## நற்சிந்தனை

### கண்ட பத்து

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை
நாக மலர்சொரியும் நல்லைநகர்க் கண்டேனே

இருவினையான் மதிமயங்கி யிடர்ப்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினா லாண்டுகொள்ளக் கடவுடிரு வுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி யவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே.

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 95

## 2005 கார்த்திகை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கந்தசஷ்டி கவச மகிமை | க. தங்கம்மா | 1 - 2 |
| அரும்பெறல் மரபிற்...... | முனைவர் கஸ்தூரிராஜா | 3 - 6 |
| திருப்பாவைத்திறவு | ந. சிவபாதம் | 7 - 9 |
| தேவாரம்காட்டும் சித்தாந்த.... | ஐ. கோ. சந்திரசேகரம் | 10 - 13 |
| எட்டுமிரண்டும் | முருகவே பரமநாதன் | 14 - 17 |
| இணுவையூர் சின்னத்தம்பி..... | மூ. சிவலிங்கம் | 18 - 19 |
| அருணகிரி சுவாமிகள் அருளி... | சி. வேலாயுதம் | 20 - 21 |
| முன்னோர் வகுத்த பண்பாடுகள்.... | | 22 - 24 |
| தலப்பெருமைகளுடன்.... | மாலினி குணரத்தினம் | 25 -28 |
| குருவாய் வருவாய் | சி. யோகேஸ்வரி | 29 - 30 |
| நல்லிசைச் செவ்வேற் சேஎய் | சிவ சண்முகவடிவேல் | 31 - 34 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்.. | வ. குமாரசாமிஜயர் | 35 - 38 |
| திருக்குறளில் அதிகார வைப்பு | இரா. செல்வவடிவேல் | 39 - 41 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 42 - 44 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 45 - 48 |
| நித்திய அன்னப்பணி.... | | 49 - 50 |
| வாசகர் போட்டி | | 51 - 52 |


**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406**

**அச்சுப்பதிப்பு:-** *சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.*

உ

# ஞானச்சுடர்

## ஐப்பசிமாத வெளியீடு

***வெளியீட்டுரை:-***

94வது சுடரான ஐப்பசிமாத மலருக்கான வெளியீட்டினை யா தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் ஆசிரியர் இ. ஸ்ரீநடராசா அவர்கள் மேற்கொண்டார்கள். பல சஞ்சிகைகள் வெளியிடப்பட்டாலும் அவை தொடர்ந்து வெளிவரமுடியாத வகையில் பல பிரச்சனைகள் தடைகள் ஏற்பட்டு ஒரு சில வெளியீடுகளுடன் நின்று விடுவதை நாம் காணுகின்றோம். இந்தச் சூழ்நிலையில் ஞானச்சுடர் 94வது சுடராகத் தொடர்ந்து வெளிவருவது சாதாரணவிடயம் அல்ல இது ஒரு சாதனையான விடயம் என்பதை ஆசிரியர் குறிப்பிட்டார்கள்.

ஆறுமுகநாவலர் எமது சமயத்தைப்பற்றிய விழிப்பை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்கு அச்சியந்திரத்தைப் பயன்படுத்தி வெளியீடுகளை மேற்கொண்டது போல இவர்களும் அச்சு இயந்திரத்தையும் தற்பொழுது கணனி மயப்படுத்தப்பட்ட அச்சு வாகனத்தையும் பயன்படுத்தி தமது செயற்பாடுகளை சிறப்பாக செயற்படுத்திவருவது இவர்களின் தூர நோக்குக்கொண்ட செயற்பாட்டை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார்கள்.

சந்நிதியில் இடம்பெறும் இதுபோன்ற நிகழ்வில் நாம் பங்குபற்றுவது முற்பிறப்பில் செய்த நற்பயனின் விளைவே எனக்குறிப்பிட்டு நூலினை வெளியீடு செய்தார்கள்.

***மதிப்பீட்டுரை:-***

வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு கு. சண்முகநாதன் அவர்கள் மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். சைவசமயம் என்பது ஒரு சமயம் அல்ல. அது ஒரு வாழ்க்கைமுறை என்றே கூறவேண்டும். ஏனென்றால் வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் அது உள்ளடக்கியுள்ளது எனத் திரு கு. சண்முகநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வெள்ளிக்கிழமை போன்ற குறிப்பிட்ட நாட்களிலோ, கந்தசஷ்டி விரதம் போன்ற குறிப்பிட்ட காலங்களிலோ மட்டும் ஆலயங்களுக்கு செல்வதோ விரதம் அனுஷ்டிப்பதோ உண்மையான சமயம் ஆகாது. நாம் எமது வாழ்க்கையையே சத்திய வாழ்வாக மாற்றவேண்டும். இவற்றை எல்லாம் மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு ஞானச்சுடர் சஞ்சிகை மகத்தான பங்களிப்பை ஆற்றிவருவதை மலரில் உள்ள கட்டுரைகளை ஆதாரங்களாகக் காட்டி திரு சண்முகநாதன் அவர்கள் தனது மதிப்புரையை இட்டுச்சென்றார்கள்.

இறைவனை அடைவதற்கு சேவை ஒன்றே வழி எனக்குறிப்பிட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் அந்த சேவைகளை இந்த ஆச்சிரமம் நிறைவாக ஆற்றி வருவதனையும் எடுத்துக் காட்டினார்கள்.

உ

# சந்நிதியான் ஆச்சிரம
# சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும்
# திருவாசக விழா
# பண்ணிசைப் போட்டி 2005

மேற்படி பேரவைஆதரவில் 06-01-2006 இல் நிகழ இருக்கும் திருவாசக விழாத்தொடர்பாக மாணவர்களிடையே வழமைபோலப் பண்ணிசைப் போட்டி நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் தரம் (2006இல்) பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றைப் பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 20-12-2006க்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கவும்.

| பிரிவுகள் | விடயம் |
|---|---|
| 1. ஆண்டு 5 – 6 | சிவபுராணம் |
| 2. ஆண்டு 7 – 8 | திருவெம்பாவை |
| 3. ஆண்டு 9 – 10 | திருப்பள்ளியெழுச்சி |

நடுவர்கள் கேட்கும் பாடல்களை மட்டும் மோகனராகத்திற் பாடிக்காட்டுதல் வேண்டும். அத்துடன் பண்ணிசைப் போட்டியிற் பங்கு பற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களதும் சமய பாடம் தொடர்பான பொது அறிவு எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.

பண்ணிசை, சமய அறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் பெறப்படும். இதில் பண்ணிசைக்கு கூடிய காத்திரம் வழங்கப்படும்.

போட்டி 01-01-2006 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு 06-01-2006 வெள்ளிக்கிழமை நிகழும் திருவாசக விழாவிற் பணத்தொகையும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**திருவாசகப் போட்டிக்குழு**

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**

உ

# சுடர் தரும் தகவல்

சந்நிதி ஆலயத்தில் மிகவும் புனிதமானதாகக் கருதப்படும் காலங்களில் கந்தசஷ்டி விரதகாலம் முக்கியமானதாகும். வழமைபோல இந்தவருடமும் அதிகளவான அடியவர்கள் உன்னதமான ஒரு விரதத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்காக ஒன்றுகூடிய காட்சி அனைவருக்கும் பரவசத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. இளம் வயதினர்களும் இந்த விரதத்திற்காக அங்கே கூடியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த புனிதமான காலத்தை மேலும் புனிதமாக்கும் ஒரு கைங்கரியமாக விஷேட தொடர் சொற்பொழிவு ஒன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சென்ற வருடத்தினைப்போல செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள் சொற்பொழிவினை வழங்கினார்கள்.

இங்கே நடைபெற்ற இந்த விஷேட சொற்பொழிவு ஒரு சொற்பொழிவு என்ற அம்சங்களில் இருந்து விடுபட்டு குருசீடர்களுக்கு உபதேசம் செய்வது போன்ற பண்புகளைப் பெருமளவுக்கு கொண்டிருந்தலை அனைவரும் உணர்ந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக ஆறுநாட்கள் இடம் பெற்ற இந்த நிகழ்வு தினமும் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. இறைவணக்கம் நடைபெறுகின்ற பொழுது அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்துவார்கள். சொற்பொழிவினை நடாத்துகின்ற திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் உயரமான திண்ணையில் அமர்ந்திருக்க சொற்பொழிவினை செவிமடுப்பவர்கள் நிலத்தில் அமைதியாகவும் அடக்கமாகவும் அமர்ந்திருந்து சொற்பொழிவில் இடம்பெற இருக்கின்ற கருத்துக்களுக்காக ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பார்கள். அத்துடன் அவர்களில் ஒருவரே இரா. செல்வவடிவேல் அவர்களுக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவார்கள். அதன்பின்பே சொற்பொழிவு ஆரம்பமாகும்.

விளம்பரம் எதுவுமில்லாத நிலையில் தாமாகவே நாடிவந்து ஒன்று கூடியிருக்கின்ற அந்த அடியார்களை திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் தனது சீடர்களாகவே பாவித்து அவர்களுக்கு பொருத்தமான சமயக்கருத்துக்களை சிறு சிறு கதைகள் மூலமும் உண்மைச்சம்பவங்கள் மூலமும் எடுத்துக்கூறி அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து பயன்பெறக்கூடிய வகையில் அவர்கள் உள்ளங்களில் சமயக்கருத்துக்களை பதியச் செய்தார்கள்.

எமது சமயம் தொடர்பாக திரு இரா. செல்வவடிவேல் அவர்களுக்கு இயல்பாக இருக்கின்ற நாட்டத்தினாலும் ஆழமான பட்டறிவினாலும் தூய்மையான சமயச் செயற்பாட்டினாலும் இது போன்ற சமயச்சொற்பொழிவுகளை பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான முறையில் நடாத்துகின்ற ஆற்றலை அவர் பெற்றுள்ளார் என்பதை எம்மால் உணரமுடிகிறது.

இரா. செல்வவடிவேல் போன்ற ஆழமான அறிவும் தூய்மையான நோக்கமும் கொண்ட சமயப்பெரியார்களையே எமது சமயம் வேண்டிநிற்கின்றது.

உ

# தேனாக நின்றான்

நினைத்தேன் சென்றுசந் நிதியடைந்தேன்
நிழல் செய் சோலை மருங்கணைந்தேன்
நெடிய விமானக் கோயில் கண்டேன்
நிமலன் முருக னைப்ப ணிந்தேன்

அனைத்தும் வீதி சுற்றி வந்தேன்
அடியார் கூட்டம் வரக் கண்டேன்
ஆடிப் பாடிக் காவடி சுமந்தோர்
அன்பின் பெருக்கைக் கண்டுய்ந்தேன்

கனைக்கும் வண்டின் ஓசையொடு
கந்தா முருகா ஓசையிடை
கருதும் புகழாற் றுப்படைப் பாட்டும்
காதிற் கேட்டேன் அதைக் கேட்டு

புனத்தின் வள்ளி தேவ யானை
பொருந்தக் காட்சி தரக் கண்டேன்
பொன்னார் சந்நிதி யானவனைப்
போற்றிப் பணிமின் பொலி வதற்கே.

முதுபெரும்புலவர்
கலாபூஷணம் ஆசிரியர்
*வை. க. சிற்றம்பலவனார்.*



உ

# கார்த்திகைமாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**திரு இ. சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய, கிராமசேவையாளர் - ஏழாலை)

**சமூகஜோதி கா. கணேசதாசன்**
(உடுவில்)

**திரு கா. ஆ. சச்சிதானந்தன்**
(சிறுப்பிட்டி தெற்கு)

**திரு வே. தர்மராசா**
(பொது முகாமையாளர் அளவெட்டி)

**காரை M.P அருளானந்தம்**
(ஆசிரியர் ஸ்ரான்லிக்கல்லூரி யாழ்ப்பாணம்)

**திரு மா. பாலேந்திரம்**
(வைர மஹால் வதிரி)

**திருமதி இராசேஸ்வரி இராசரெத்தினம்**
(சந்தை வீதி, சுண்ணாகம்)

**திரு கு. வாகீசன்**
(உரும்பராய் தெற்கு)

**திரு செ. ஞானசபேசன்**
(கிராம அலுவலர் ஏழாலை)

**உரிமையாளர்**
(ராஜன் எலக்ரோணிக் அச்சுவேலி)

**திரு சி. உதயகுமார்**
(கிராம சேவையாளர் சிறுப்பிட்டி மேற்கு)

**திரு ஆ. யோகதாசன்**
(பூதவராஜர் கோவிலடி உரும்பராய்)

**திரு செ. சுகுணன்**
(மாளியாவத்தை சங்கானை)

**உரிமையாளர்**
(காசிப்பிள்ளை அன்சன்ஸ் சங்கானை)

**திரு சி. மகேஸ்வரன்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் தீவக வலயம்)

**திரு சி. சச்சிதானந்தம்**
(திஷானி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி தெற்கு)

**திரு தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு)
**திரு செ. இராசநாயகம்**
(காப்பாளர், இ. போ. சபை. பருத்தித்துறை)
**திரு ம. ஸ்ரீகாந்தன்**
(ஐங்கரன் ஸ்ரோர்ஸ், சங்கானை)
**அதிபர்**
(ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
**அதிபர்**
(ஞானசாரியார் கல்லூரி, பருத்தித்துறை)
**தலைவர்**
(ப. நோ. கூ. சங்கம், கட்டைவேலி)
**அதிபர்**
(தேவரையாளிக் கல்லூரி வதிரி)
**திரு ஆ. வடிவேலு**
(இளைப்பாறிய அதிபர், தும்பளை)
**திரு சி. பத்மராசா**
(நவிண்டில் கரணவாய்)
**திரு ச. நாராயணன்**
(கிராம அலுவலர், வடலியடைப்பு பண்டத்தரிப்பு)
**திரு செ. இரத்தினசிங்கம்**
(வீரபத்திர கோவிலடி உடுப்பிட்டி)
**திரு வீ. வடிவேலு**
(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)
**திருமதி ம. மகாதேவன்**
(பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)
**திரு க. சந்திரகுமார்**
(விதுஷா கிறீம் ஹவுஸ், சங்கானை)
**திரு கு. சிவனேசராசன் (ஆசிரியர்)**
(கந்தசாமிகோவிலடி, கோப்பாய் வடக்கு)
**திரு ச. இராசசேகரம்**
(இளை பொது முகாமையாளர் நீர்வேலி)
**திரு க. சத்தியதாஸ்**
(வில்லிசைக் கலைஞர். சிறுப்பிட்டி)

திரு கு. சர்வேஸ்வரன்
(பிள்ளையார் கல் உடைப்பு ஆலை புத்தூர்)
திரு பொ. பாலசிங்கம்
(பத்தமேனி அச்சுவேலி)
திரு இ. சண்முகசுந்தரம்
(ஆசிரியர் மந்திகை)
திரு தி. ரவீந்திரநாதன்
(கலைமணி வீதி கட்டைப்பிராய்)
செல்வி க. சசிலேகா
(தோப்பு அச்சுவேலி)
திரு வே. முருகவேள்
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

---

# கந்தசஷ்டிகால விசேட நிகழ்விற்கு வழமையாக உதவிபுரியும் அன்பர்கள் விபரம்

| | |
|---|---|
| மதுஷன் பல்பொருள் வாணிபம் | உடுப்பிட்டி |
| கோபிகிருஷ்ணா பல்பொருள் வாணிபம் | உடுப்பிட்டி |
| அருள் ஆபரண மாளிகை | உடுப்பிட்டி |
| வ. அப்புத்துரை | வல்வெட்டி |
| செல்வா ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் |
| பாக்கியரெட்ணம் ஹாட்வெயர்ஸ் | சங்கானை |
| கிருஸ்ணா ஸ்ரோர்ஸ் | சங்கானை |
| றஜினி பீடா ஸ்ரோர்ஸ் | உடுப்பிட்டி |



உ



# கந்தசஷ்டி கவச மகிமை

திருமதி தங்கம்மா கந்தவனம் அவர்கள்

நான் சிறுபிள்ளையாக இருக்கும் போதே எனது தந்தையார் கந்தசஷ்டி விரதம் அனுட்டிப்பார். அவர் சோறு அல்லது அரிசிமா உணவுகள் உண்பதில்லை. மாலையில் உழுந்து அவித்துத் துவைத்துப் பாலுடன் அருந்துவார். அதில் சிறிது பங்கு எனக்கும் ஊட்டிவிடுவார். அந்த ஆறு நாளும் நுணுப்பாவளைக் கந்தசாமி கோவிலிற் கந்தபுராணப் படிப்பு தந்தையார் பயன் சொல்ல அவரின் மாணவர்கள் வாசிப்பார். கந்தசஷ்டி விரதம் ஏன் அனுஷ்டிக்க வேண்டுமென விளக்கமும் எனக்குக் கூறுவார். துவையல் உழுந்தின் சுவையும் தந்தையார் தந்த விளக்கமும் அந்த விரதத்தை அனுட்டிக்க வேண்டுமென்ற ஒரு அவாவை என்னுள் உருவாக்கியது.

நான் மணம் புரிந்து கணவருடன் கொழும்பிற்கு ஆசிரியையாகப் பணியாற்றச் சென்ற பொழுது எனது கணவர் 16 வயதிலிருந்தே கந்தசஷ்டி விரதம் பிடிப்பதாகக்கூறி அந்த ஆறு நாட்களும் பாடசாலை விடுமுறை எடுத்து ஜிந்துப்பிட்டிச் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பகல் முழுவதும் புராணம் படித்து அங்கேயே தீர்த்தம் வாங்கிப்பருகி விட்டு வருவார். சூரன் போரின் அடுத்த நாள் பாரணம் பண்ணுவோம்.

1961இல் ஒரு குழந்தை பிறந்தது. (தற்பொழுது ஏகாம்பர வித்தியாலய அதிபர்) அதிலிருந்து எனக்கு ஒரு நோய் சரீரம் வீங்கி முகம் கை கால் எல்லாம் வீங்கும். கொழும்பிலுள்ள பெரிய வைத்தியர்கள் எல்லாம் கைவிட்ட நிலையில் எங்களுடன் குடியிருந்த ஒரு இந்திய நண்பர் குடும்பம் இந்தியாவில் வேலூருக்குக் கொண்டுபோய் வைத்தியம் செய்யலாம் என ஆலோசனைகூறி, அதற்குரிய ஆயத்தங்கள் நடைபெற்றன.

எனக்கு அப்பொழுது வயது 30 எனது சகஆசிரியர்கள், கணவரின் பாடசாலை ஆசிரியர்கள் கொண்டு வந்து தந்த ஹோர்லிக்ஸ், வீவா, நெஸ்ரமோட் அலுமாரி நிறைந்து விட்டது. ஒரு நாள் ஒரு ஆசிரியை (பெயர் நினைவில் வருகுதில்லை. அவரின் உருவம் எனது மனத்திலுள்ளது.) ஒரு சிறிய புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்து தந்து "ரீச்சர் இதைக் காலையும், மாலையும் பாராயணம் செய்யுங்கள் சுகம் வரும்" எனக் கூறிச் சென்றார். நானும் அன்றிலிருந்து அவர் தந்த கந்தசஷ்டி கவசம், 2ம் பாகம் திருச்சீரலைவாய் எனும் திருத்தலம் மீது பாடப்பெற்றது. காலையும் மாலையும் பாராயணம் பண்ணத் தொடங்கினேன் சரியாய் ஒரு மாதத்தில் பழைய ஆளாக உருப்பெற்றுப் பாடசாலை சென்று 1990 வரை சேவை செய்தேன்.

இந்நூல் பாலன் தேவராச சுவாமிகளாற் பாடப்பட்டது. முதலாவது திருப்பரங்குன்றுறை முருகன். இரண்டாவது கவசம் திருச்சீரலைவாய் முருகன்.

மூன்றாவது கவசம் திருவாவினன் குடி முருகன். நான்காவது கவசம் சுவாமி மலை (திருவேரகத்துறை முருகன்) ஐந் தாவது கவசம் திருத்தணிகை முருகன். ஆறாவது கவசம் பழமுதிர்சோலைக் கதிரோன் என அறுபடை வீடுகளையும் உள்ளடக்கியது.

எனக்கு முதலிற் கிடைத்தது இரண்டாவது கவசம் தான் (திருச் செந் தூர் மேய கந்தவேள்) இடையிலே நான் அதைத் தளர விட்டு விட்டேன். இப் பொழுது எனக்கு இரத்த அழுத்த நோய். நான் பழையபடி காலை மாலை பாரா யணம் செய்கிறேன். ஒரு வாரத்தில் எனக் குச் சிறிது முன்னேற்றம் தெரிகிறது. அடியார்களும் அன்பர்களும் இக் கந்த சஷ்டி கவசத்தைப் படித்துப் பயன் பெறலாமென நம்பி இதை எழுதுகிறேன்.

## கோலம் போட வாருங்கள்

மார்கழி பிறந்து விட்டால், மனத்தினைச் செளபாக்கியமாக வாழவைப்பது கோலங்களேயாகும். கோலம் ஒரு தனிக்கலை. வீட்டிற்கு மங்களத்தினை வழங்க வல்லது. வருவோரைப் பணியவைப்பது. போடுவோரை வாழவைப்பது. இறைவனை வரவேற்பது மட்டுமல்ல, மகிழச்செய்வதும்கூட. எதிரிகளுக்கு எச்சரிக்கை செய்வது மட்டுமல்ல, உள்ளே வரவிடாமல் தடுப்பதும்கூட. கல்வி, செல்வம், ஆயுள், பாதுகாப்பு, அமைதி, ஆனந்தம் தரவல்லது. வற்றாத அன்னத்தைத் தரவல்லது. பரீட்சைகளில் வெற்றிபெறச்செய்வது. திருமண சுபகாரியங்களை நிறைவேற்றி வைப்பது. சந்தான பாக்கியத்தை அருளுவது. தூரப்பயணங்களுக்கு வெற்றிகரமாக அனுப்பியும், திரும்பவும் சுகமாய் வந்து சேரவும் வைப்பது. எறும்புகள் முதலான சீவராசிகளுக்கு உணவாகவும், தருமமாகவும் அமைவது. இத்தகு பேறுகளை அள்ளித்தரும் கோலங்களை, வறுத்த அரிசி மாவினால் மட்டும் மார்கழிமாதத்தில் வீட்டு வாயிலிற் போட்டுப் பிள்ளையாரை எழுந்தருளச்செய்து வணங்கி வாருங்கள். யாவும் நல்லபடி நடக்கும். புள்ளிகள் இட்டும், கற்பனையாகவும், அலங்காரமாகவும் கோலங்களைப் போட்டுக்கொள்ளலாம். தமிழரின் பண்பாட்டம்சமான கோலத்தினைப் போடவாருங்கள். மார்கழி அல்லவா?

-கே. எஸ். சிவஞானராஜா.

## அறஞ்செய விரும்பு

தருமத்தைச் செய்வதற்கு நீ ஆசைகொள்ளு. அறம் என்பது மேலானது. அது சுகத்தையும், செல்வத்தையும், இன்பத்தையும் தருவது. அது என்றும் அழியாதது. அது எம்மைக் காப்பது. அது உண்மையும், சுத்தமும் உள்ளது. ஆதலால் நாம் தருமஞ் செய்வதற்கு ஆசைப்படுதல் வேண்டும். ஏழைகளுக்கு உணவு, உடை கொடுத்தல் தருமமாகும்.

வாய்ப்பு இருதரம் கதவைத் தட்டாது.

உ

(தொடர்ச்சி..

# அரும்பெறல்மரபிற் பெரும்பெயர்முருகன்

முனைவர் கஸ்தூரிராஜா அவர்கள்
அண்ணாமலை ஆதர்ச மகளிர் கல்லூரி (தமிழ்நாடு)

## திருவடிச் சிறப்பு

தன்னை அடைந்தவர்களின் தீவினையைப் போக்கித் தாங்கும் அவர்களது அறியாமையைப் போக்கும் வலிய திருவடிகளை உடையவன் (4) என்கிறார் நக்கீரர். இதனை,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (10)

என்ற குறட்பாவும் பிறவிக்கடலைக் கடக்க இறைவடியைச் சேர வேண்டும் என்கிறது. நக்கீரரும் 287-295 அடிகளில் இறைவனையடைய இறையருள் கிட்டும் என்கிறார். மாணடியின் சிறப்பினை 3,4,7,8,9 ஆம் குறட்பாக்களிலும் உணரலாம். திருவடியே திருவருள் வழங்கும் என்பதைத் திருமுருகாற்றுப் படை அறிவுறுத்துகிறது.

## மாலையின் மாண்பு

கடம்ப மாலை முருகப் பெருமானுக்கு உரியது. அதை அணியும் அப்பெருமான் 'கடம்பன்' எனப்படுகிறான். ஒளியுண்டாவதும், மழை பெய்தலும் பெருமான் முருகனின் அருள் என்பதனை, முருகனின் மாலை கொண்டு உய்த்துணர வைக்கிறார். நக்கீரர் (7-11). மேலும், முருகப்பெருமானின் திருமுடியினை அழகு செய்யும் தீப்போலும் ஒளியையுடைய செங்காந்தள் மலரினையும் 42-44 ஆம் அடிகளிற் குறிக்கிறார் நக்கீரர்.

இறைவன் படைத்த அனைத் துறுப்புக்களிலும் ஈகை என்ற பண்பினை, நன்மையைச் செய்யப் பயன்படுவது கைகளேயாகும். இதனையே,

"ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கை யாலட்டிப் போற்றியென் னாத இவ்
வாக்கை யாற்பயனென்"

என்று அப்பர் சுவாமிகள் கூறி, கைகள், செவிகள், கண்கள், மூக்கு ஆகிய பொறிகள் ஆண்டவனைத் துதிக்கவே பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிக்கிறார். இறைவனைப் புலன்கள் வழிப் போற்றவே புரியாத வீடு பேறு புலப்படும் என்பதனை உணர முடிகிறது.

## திருக்கைகளின் சிறப்பு

பொன்னால் ஆன மாலையணிந்த அழகையுடைய வரியையும், தன்னிடத்தில் வந்து விழும்படி வாங்கிய வலிமை மிக்க வேலை எறிந்து வென்று வளமை

நீ போதிப்பதை நீயே பயிற்சி செய்.

யான புகழால் நிறையப் பெற்றுப் பகைவரின் உடலைப் பிளந்து மீட்டும் அவ் வேலை வாங்குகின்ற உயர்ந்த தோள் களில் இணைந்துள்ள, பன்னிரு கைகள் வழங்கும் அருளை நக்கீரப் பெருமான் கீழ்வருமாறு உணர்த்துகிறார்.

"ஒரு கை உக்கம் சேர்த்தியது ஒரு கை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை அசைஇயது ஒரு கை
..............................
..............................
ஆங்கு அப்பன்னிரு கையும் பாற்பட இயற்றி" (109-118)

## திருமுகங்களின் செயல்

ஒரு முகம் பெருமையுடைய இருளால் மறைக்கப்பட்ட உலகம், குற்றம் இல்லாமல் விளங்கும் பொருட்டுப் பல சுடர்களைத் தோற்றுவித்தது. அடியவர்க்கு வேண்டியவைகளைக் காதலால் மகிழ்ந்து தந்தது பெருமானின் இன்னொரு திருமுகம். அந்தணர் செய்யும் வேள்வியைக் காப்பது மூன்றாம் திருமுகம். நான்காம் திருமுகம். உயிரின் அறிவகற்றித் தன் வியாபகம் முழுவதும் உணர்ந்து இன்பம் அடையுமாறு அருளும். அசுரர்களை அழிக்கும் ஐந்தாம் திருமுகம் எனில் ஆறாம் முகம் உலகில் உயிர்கள் அன்பு பொருந்தி இல்லறத்தில் இன்பம் பெற அருளும் என்று ஆறுமுகங்களின் செயல்களை 83-102 ஆம் அடிகளில் நக்கீரர் நயமுடன் உணர்த்துகிறார். முருகன் அடியவர்கள் எண்ணும் எண்ணத்தைத் தம் அருள் முகவெளிப்பாட்டால் அருளுவதை நக்கீரப் பெருமான் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்.

## பண்புகள்

வீட்டின்பத்தைப் பெறவேண்டும் என்று விரும்பிவந்தவர்க்கு அதை அளித்து அனுபவிக்கச் செய்யும் புகழ் பொருந்தியவனே! துன்பப்பட்டு வந்தவர்க்கு அருளும் பொன்னால் ஆன பேரணிகலன்களை உடையவனே! மிக்குச் செய்யும் போர்களை முடித்து வென்று அருளும் நின் மார்பிடத்தே இரந்து வந்தவரைத் தழுவி அவர்க்கு வேண்டுவனவற்றைத் தந்து காக்கும் அச்சம் பொருந்திய நெடிய வேளே! தேவரும் அந்தணரும் ஓதித் துதிக்கின்ற பெரிய மறைமொழியாம் திருப்பெயரை உடையவனே! 270-274 ஆம் அடிகளின் மூலம் நக்கீரர் முருகனின் அருள் நிறை பண்புகளை விளக்குகிறார். மேலும் முருகனின் புகழினை 253-269 ஆம் அடிகளின் மூலம் விளக்கியுள்ளார். திருவுறுப்புக்களின் செயல்களைக் கூறிய நக்கீரர். திருமுருகனின் செயல்களாக ஒட்டு மொத்தமாக 206-217 ஆம் அடிகளில் விளக்குகிறார். கண்டவரை மயக்கும் முருகனின் அழகில் மயங்கிய அடியவர்களின் மனோநிலையையும் நக்கீரர் உணர்த்துகிறார். மேலும் முருகனை வணங்கினாற் கருதியது கிட்டும்(62-64) என்பதனையும் உணர்த்துகின்றார்.

## வழிபடும் முறை

இறைவனை வழிபடும் முறைகளைச் சிவஞான சித்தியார்(பா.எண்.114) கீழ்வருமாறு கூறுகிறது.

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டு அங்கு, இச்சித்த தெய்வம் போற்றிச்
சினம் முதல் அகற்றி வாழும் செயல் அறம் ஆனால் யார்க்கும்
முனம் ஒரு தெய்வம் எங்கும் செயற்கு முன்நிலையாம் அன்றே."

இப்பாடலின் மூலம் இறைவனை வணங்க அருள்கிட்டும் என்பது பெறப்படுகின்றது.

வேதங்களை ஓதியும், வேள்விகளைச் செய்தும், அந்தணர்கள் வேண்டும் பொருளை வழங்கியும், வழிபடுதல் ஆகியவை இறைவனை வணங்கும் முறைகளில் ஒன்றென நக்கீரர் (176-189) மொழிகிறார். இதனை,

"உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறு எழுத்து அடங்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து"

என்ற பாடலால் அறியலாம்.

பக்தி இலக்கியங்களில் இறைவனை வழிபடும் முறைகளை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். அடியவர்களிற் சிலர் இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் பாவித்து நாயக நாயகி பாவம் என்ற முறையிலே பாடல்கள் பல பாடியுள்ளனர். இதன் உட்கருத்து இறைவனின் அருள் அடியவருக்குக் கிட்டியது என்பதேயாம். எடுத்துக்காட்டாக, திருநாவுக்கரசரின் அகப்பொருள் தழுவி அமைந்த கீழ்வரும் பாடலைச் சுட்டலாம்.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
.....................
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!"

## வீடு பேறு

இறைவனை நாடும் உள்ளம் அப்பிறவியில் நாடும் நாட்டமாகக் கொள்ளஇயலாது. பல பிறவிகளில் இறைவனை நினைந்து நினைந்து உருகி முதிரும் பிறவியிலேயே அவன் அருளினால் அவன் தாள் வணங்க முடியும். அப்பொழுதே அவன் உயிருக்கு உய்வு கிட்டும். அதாவது வீடு பேறு பெறும். இதனை நக்கீரர்,

"எய்யா நல் இசை செவ் வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு

அறிவாளி மனத்தை மாற்றிக் கொள்வான்.

நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" (61-66)

என்ற அடிகளால் உணர்த்துகிறார்.

இறைவனை அடையவேண்டும் என்ற முனைப்போடு உன் செலவை மேற்கொண்டால் இப்போதே பெறுவாய் நீ கருதியதை அடிகள் 62-64 ஆம் என்று உணர்த்தி நக்கீரப்பெருமான், முருகன் தரும் பரிசினையும் மிகத் தெளிவாக உணர்த்துகிறார். (287-295)

திருமுருகன் முதலில் அடியவர் உள்ளத்தில் தோன்றி, பின் அடியவர் முன் எழுந்தருளுவான். தன் அழகிய அழியாவடிவைக் காட்டி, உன் முனைப்பை நான் அறிவேன் என்று வாழ்த்தி வீடு பேற்றினை நல்குவான் என்கிறார். நக்கீரர். இதனை,

"மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின்வரவு என
................
பெறல் அரும் பரிசில் நல்குமதி" (290-295)

என்ற பாடலால் உணரலாம்.

முருகனை வழிபடவே பெரும் பெயர் வீட்டின்பத்தை அவன் விரைந்து வந்து அளிப்பான் என்பது பெறப்படுகிறது.

## முடிவுரை

1) இயற்கையே இறைவன்
2) முருக வழிபாடு தொன்மையானது
3) ஆறுமுகமும், பன்னிரு கைகளும் அடியவருக்கு அருளை வழங்கவே உள்ளன.
4) தமிழ்ப் பெருமகன் முருகன். அவன் நீக்கமற நிறைந்துள்ளான்.
5) வீடு பேற்றினைப் பெற முருகனை வழிபட வேண்டும்.

(முற்றும்)

மனிதன் காரியங்களினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் எதை அடிக்கடி பிடித்துக்கொள்கின்றானோ அதுதான் அவனைக் கவர்கின்றது. ஆகவே நல்லதையே செய்யவேண்டும். விடாமுயற்சியானது செல்வத்திற்கும் லாபத்திற்கும் நன்மைக்கும் காரணமாக அமைகின்றது. விடாமுயற்சி உள்ளவன் மேன்மையடைவதோடு சுகத்தை அனுபவிக்கின்றான்.

அளவறிந்த நடவடிக்கை சிறப்பாக வெற்றிபெறும்.

உ

# திருப்பாவைத் திறவு

திரு ந. சிவபாதம் (புத்தொளி) அவர்கள்

மார்கழி மாதத்தில் மலரும் திருவாதிரைக்குப் பத்துநாட்களுக்கு முன்பு தொடங்கி திருவாதிரை ஈறாக, திருவாதவூரரின் திருவெம்பாவை இருபது பாடலும் சைவர்களாற் படிக்கப்படும். ஆண்டாள் அருளிய திருப்பாவை முப்பது பாடலும், நாளொன்றுக்கு ஒரு பாட்டாக மார்கழி முழுவதும் வைணவர்களாற் பாராயணம் செய்யப்பெற்றும் வருகின்றன. உதய காலத்தில் மார்கழி முழுவதுமே நீராட்டத்திற்கு உரியதாயினும், திருவாதிரை நட்சத்திரத்தை ஒட்டிவரும் பூரணைத் திருநாளே. அதற்கு உகந்ததென நம் முன்னோர் கைக்கொண்டனர்.

ஆதிகாலத்தில் இம்மைப் பயன் கருதி கன்னியரால் மேற்கொள்ளப் பெற்ற பாவை நோன்பு காலப்போக்கில் மறுமைப் பயன்கருதி ஆண்பெண் எல்லோராலும் அனுட்டிக்கப் பெற்று வருகின்றது. மாணிக்கவாசகரின் திருவாசகத் தேன் துளி திருவெம்பாவை நாலாயிரம் திவ்யப் பிரபந்தமான அருட்கடலுள் ஆய்த் தெடுத்த ஆணிமுத்துப் போன்றது கோதை தமிழ் எனக் கொண்டாடப்பெறும் ஆண்டாள் அருளிய திருப்பாவை இந்நூல் கி. பி எட்டாம் நூற்றாண்டில் எழுந்ததென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மார்கழிமாதம் விடியற்காலத்தை உணர்த்துவதால், இம்மாதத்தில் இந்துக்கள் இறைவனை எழுப்புவதாகப் பாவனை செய்து திருப்பள்ளி எழுச்சிபாடி வழிபடுவர். "மாதங்கள் அனைத்திலும் நான் மார்கழி மாதம்" என்று பகவத்கீதையில் கண்ணன் கூறியது இம்மாதத்தின் மகத்துவத்தையும் தெய்வீகத் தன்மையையும் வலியுறுத்துகின்றது. இதனாலேயே பண்டைக்காலம் தொட்டு இம் மாதத்திற் பாவைநோன்பு நிலவி வருகின்றது.

மார்கழித் திருவாதிரைப் பூரணையன்று பாவைநோன்பு ஆதியில் மேற்கொள்ளப் பெற்றது கோகுலக் கன்னியர் தம் தெய்வமாகிய திருமாலை வேண்டி நோற்றதே பாவை நோன்பாகும். அவர்கள் அதிகாலையில் எழுந்து தம் தோழியரை எழுப்பி நீராடச் செல்வது, பாவை நோன்பின் முதற்படியாகும்.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்

என்ற திருப்பாவை ஆரம்பமாகின்றது.

கண்ணபிரான் வழிபட்ட கன்னியர் நாட்டில் மழையும் நெல்லும் பாலும் பெருகவும், தாம் நல்ல கணவரை அடையவும் பாவை நோன்பை நோற்றனர். கண்ணனையே கணவனாகப் பாவித்து, அவனை அடைய அவாக்கொண்ட உட்பொருளை

யும் இந்நோன்பு குறிக்கும். இந் நலன் களை எல்லாம் உலகமாதாவாகிய தேவி மூலம் மனுச் செய்தே எம்பிரானிடம் பெற்றுக் கொள்வது மரபாகும். இவ்வுண் மையை,

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" எனத் திருவருட்பயன் உணர்த்துகின்றது.
"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்"

என்ற திருவாதவூரர் திருவெம் பாவை இக்கருத்தை மேலும் மெருகூட்டு கின்றது. பாவையர் பாவை செய்து தேவிக்கு வழிபாடியற்றியதாலும், இது பாவை நோன்பு எனப்பெயர் பெற்றது. முடிவில் வழிபட்ட மகளிர்முன் கண்ண பிரான் தோன்றி அவர்கள் கோரிக்கை களை வழங்குகிறான்.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் குளித்து நீராடச் சென்ற செய்தியை முதலாம் பாட்டிலும் பாவை யர் மேற்கொண்ட விரதநெறிகளும் நியமங்களும் அவர்கள் நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் என்று செய்யத்தகாதவற்றை செய்யாதும் கோள்சொல்லாது இருப்பதாகவும் கூறிய உறுதி மொழிகளும் இரண்டாம் பாட்டி லும் இடம்பெறுகின்றன.

தானமும் தருமமும் செய்வதை நோன்பிற்கு ஆதாரமாகக் கொண்டார்கள். நோன்பின் பயனாக, மாதம் மும்மாரி பெய்து நெல் பெருகிபாலினால் குடம் நிறைக்கும் பசுக்களான நீங்காத செல் வம் நிறையும் என்று மூன்றாம் பாட்டுக் காட்டுகின்றது. மழைக்கு மனுச் செய்வ தாக நான்காம்பாட்டும், கண்ணனை வழி படுவதால் பழவினையுமாயும் என்று ஐந்தாம் பாட்டும் குறிக்கின்றது. பாடிப் பரவிச் செல்லும் பாவையர் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புவர் பொழுது புலர்ந்ததைப் புலப்படுத்துவர். அரி என்று ஆண்டவனை வணங்குவர். தயிர்கடையும் ஓசையும், மேயப்புறப்படும் எருமைகள் பற்றியும் ஆறாம் ஏழாம் எட்டாம் பாடல் கள் தெரிவிக்கின்றன. நல்ல தூக்கத் திலிருந்த பெண்ணுக்கு எழுந்திருக்க மனமில்லை. "எல்லோரும் போந்தாரோ" என்கிறாள் ஒருத்தி. "நீயே எழுந்து வந்து எண்ணிக் கொள்" என்பது மற்றவள் மறுமொழி இங்ஙனம் துயில் எழுப்பல், கேள்விபதில் ஒன்பதாம் பாட்டு முதல் பதினைந்தாம் பாட்டுவரை படித்து பரவச மடையலாம்.

எல்லோரும் ஒன்றுகூடி நந்த கோபனுடைய அரண்மனைக்குச் செல் கிறார்கள். உள்ளே சென்று தந்தையும் தாயுமாகிய நந்தகோபனையும், யசோதை யையும், அண்ணனும் தம்பியுமாகிய பல ராமனையும் கண்ணபிரானையும் துயில் எழுப்புகிறார்கள். கண்ணபிரானின் தேவியை "சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்" என வேண்டுகிறார்கள். பிராட்டியார் எழுந்து வெளியில் வந்து கன்னியரோடு கலந்து கண்ணனைத் துயிலுணர்த்துகிறாள். அவள் வீரத்தை

வியக்கிறார்கள். திருப்பள்ளி எழுச்சிக் காட்சிகள் பதினாறாம் பாட்டுத் தொடக்கம் இருபத்தைந்தாம் பாடல்வரை காணலாம். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பரந்தாமன் பாவையர் வேண்டுவதைப் பரிந்து கேட்கிறான். தமக்கு வேண்டுவதைக் குறிப்பிடுகிறார்கள். இவற்றை இருபத்தாறாம் பாட்டுத்தொடக்கம் இருபத்தொன்பது வரையுள்ள பாடல்களில் படிக்கலாம்.

"என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்"

என்ற திருப்பாவையின் பெருநோக்கை இருபத்தொன்பதாம் பாடலிலும் ஈற்றில் வரும் முப்பதாம் பாடல் திருப்பாவை முப்பதையும் கற்பவர் பெறும் பயனைப் பகர்கின்றது.

"செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய்"

என்பதால் திருப்பாவைத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமல் ஓதுபவர் திருமாலின் அருட்கடலுள் மூழ்கித் திருவருள் இன்பத்தில் திளைப்பர் என்பது உறுதி.

### *அறுபடை வீட்டின் தத்துவமும் ஆறுமுகனின் தத்துவமும்*

முருகப்பெருமான் நமக்கு வீடுபேற்றை அளிக்கவல்லவன். இந்த வீடுபேற்றைப் பெறத்தடையாக இருப்பவர்கள் காம, குரோத, லோப, மோக, மத மாற்சரியங்கள் என்ற ஆறு பகைவர்கள். அந்த ஆறுபகைவர்களை அழித்து வீடுபெற நினைப்பவர்கள், ஆறுமுகப் பெருமானுடைய ஆறெழுத்தை ஓதவேண்டும். ஆறுபடை வீடுகளையும் சேவிக்கவேண்டும்.

நம்முடைய உடம்பிலே ஆறு ஆதாரங்கள் அமைந்திருக்கின்றன. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படுபவை அந்த ஆறு ஆதாரங்கள். இவற்றின் அடையாளங்களாக விளங்குபவையே ஆறுபடை வீடுகள்.

தெய்வயானையை மணந்து உல்லாசமாக விளங்கும் தலம் திருப்பரங்குன்றம்.

சிந்தனையாகிய அலைகள் வந்து திருக்கோயிலின் மதிற்புறத்தே மோதி, அலைபாயும் துன்பங்களைத் துடைத்தெறியும் இடம் திருச்செந்தூர்.

ஞான தண்டபாணியாகக் காட்சி அளிக்கின்ற யோகத்தலம் திருவாவினன்குடி.

தந்தைக்கு இதமாக ஓம் என்பதன் உட்பொருளை - உபதேசித்த திருத்தலம் திருவேரகம் (சுவாமிமலை)

சல்லாபமாகக் குறிஞ்சி நிலமாகிய மலைகளில் விளையாடுகின்ற தலம் திருத்தணி.

வினோதம் - பொழுது போக்காக ஞானப்பழம் உதிர்கின்ற சச்சிதானந்த சோலையாக விளங்குவது பழமுதிர்சோலை.

மௌனம் இதயத்தின் இனிய மருந்து.

(தொடர்ச்சி..

உ

# தேவாரம் காட்டும் சித்தாந்த வாழ்வு

திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்

ஒருமை என்பது சிவன் தனி முதற்பொருள் என்பதையும் ஆன்மா உணரவேண்டும். மற்றொரு கருத்து 'சத், அசத்' என்ற இருமைப் பண்புகளில் 'அசத்' என்ற இளிந்த பண்பை விட்டொழித்து 'ஏகனாகி இறைபணி நிற்றல்' என்ற நிலையில் 'சத்' எனப்படும் தூய்மைப் பொருளாகிய சிவனோடு இரண்டறக் கலந்து தூய மகிழ்ச்சியைத் துய்க்கும் நிலைக்கு ஆன்மா உயரவேண்டும் ஏனெனில் ஆன்மா பாசம் போன்று 'அசத்' அன்று, பதியைப் போன்று சத்தும் அன்று.

எனவே, பதியோடு இருக்கும் போது சத்தாகவும், பாசத்தோடு சேரும் போதுஅசத்தாகவும் உள்ளது. மேலும் சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அனுபவியாது. எனவே அசத்தாகிய பாசம் அறிவில்லாத சடம் ஆதலின் அதுவும் சத்தாகிய சிவத்தை அறிந்து அனுபவியாது. எனவே, இரண்டையும் அறிந்து அனுபவிக்கும் தன்மை உடையதாகிய மூன்றாவது பொருள் (அறிவுப்பொருள்) உண்டு. அதுவே ஆன்மா அது இரண்டில் ஒன்றாதல் கூடாமையால், அந்த இரண்டுமாகாது. இரண்டின் தன்மையையும் உடைய ஒரு தனிப்பொருள் ஆகும். அது சதசத்தாகும்.

எனவே இருதிறன் அறிவுள்ளது இரண்டலா ஆன்மா என்பார் மெய்கண்டார். அப்பர்பெருமானும் 'ஒன்றியிருந்து நினைமிலாம் உத்தமர்க்கு ஊனமில்லை' என்கின்றார். பாசநீக்கம் பெற்று 'உள்ளம் உள்கி உகந்து சிவனென்று மெல்ல வுள்க வினைகெடும் மெய்ம்மையே' என்பார் சம்பந்தப் பெருமான். ஆக பிறவி எடுத்ததன் பயன் நெறியில்லா நெறியிற் சென்று அல்லற்படும் ஆன்மா சிவநெறிகள் சேராமல் திருவருளே சேரும் வண்ணம் சிவனருள் பெற்றுத் தானன்றித் வேறொன்றில்லாத் தத்துவனை வாழ்த்தி வணங்கி, வழிபட்டு உய்தியடைதலாம்.

'முப்பதும் முப்பத்தாறும் முப்பதும் இடுகுரம்பை' என்று 96 தத்துவங்களால் ஆன உடம்பை 'மெய்யுளே விளக்கை ஏற்றிவேண்டியளவுயரத்தூண்டி உய்வதோர் உபாயம்' பெற வேண்டும். 'பொறியிலா அழுக்கை ஓம்பிப் பொய்யினை மெய்யென்றெண்ணி நெறியலா நெறிகள் சென்றேன் நீதனேன் நீதி ஏதும் அறிவிலேன்' என்று அப்பரடிகள் புலம்புகின்றார். ஆனால் அவரே தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித்தேடொனாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன் என்கிறார்.

ஆன்மா சத்அசத் என்ற இருமையை விட்டு சிவசத்து என்ற ஒருமை நிலையை அடைவதே சித்தாந்த வாழ்வின் உயரியநிலை அனுபவமாகும். சைவசமயம் இப்பிறவியைப் பழிக்காமல் இறைவனடி சேரும் ஒரு வாய்ப்பாகக் கருதுகிறது. மானுடன் பிறவி வகுத்தது தானும் ஆனஞ்சாடும் அரன் மணிக்காக

அன்றோ என்கிறது சிவஞானசித்தியார். அப்பரடிகள் 'வாய்த்தது நந்தமக்கு ஈன்றோர் பிறவி மதித்திடுமின்' என்று அறிவுறுத்துகின்றார். 'பிறந்த பிறவியிற் பேணிஎம் செல்வன் கழலடைவான்' என்கிறார் ஞானசம்பந்தர். இதை விடுத்து உலகியலில் உழன்றால் ஆணவம் அதிகமாகி விளைவுகள் ஈட்டி மாயை வயப்பட்டுப் பல பிறவிகள் எடுக்க நேரிடும். 'இன்பமும் பிறப்பிறப்பினோடு துன்பமும் உடனே வைத்த சோதியன்' என்பார் அப்பரடிகள். சம்பந்தப்பெருமான் 'பிறவியால் வருவன கேடுள' என்றும் 'பிறவியறுப்பீர் காள்' என்றும் பேசுகின்றார். 'சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக் குற்றமில் குணங்களொடு கூடும் அடியார்கள்' வாழினும் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உனகழல் விடுவேனல் லேன்' என்றும் 'வழுக்கி வீழினும் நின் திருப்பெயரல்லால் மற்று அறியேன் மறு மாற்றம்' என்றும் 'மற்றுப் பற்று எனக் கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித் தேன்' என்றும் வெளிப்படுத்திப் புதுப் பிறப்பு எய்துவதாகக் கூறுகிறார்கள்.

அதாவது வினைப்போகத்தால் தேகம் கண்டது முதற்பிறப்பு இனிப் பிறவாத தன்மை வந்தவிடத்து ஏற்படுவது இரண்டாம் பிறப்பு. இறைவனருளை ஞானத்தால் அறிந்து, அன்பு செலுத்தி இருபிறப்பாளனாகி வாழ்வதே சித்தாந்த வாழ்வு.

# பதி உண்மை

பதி எனப்படும் சிவபெருமான் தன்னளவில் அருவமாகி அடியவர்க்காக அருள்வடிவம் தாங்கி, நம் கருமேனி கழிக்கவேண்டி ஆலயங்களில் அருவுரு வான சிவலிங்கத்திருமேனிபெற்று அருள் பாலிக்கின்றார். சென்று நாம் சிறு தெய் வம் சேர்வோம் அல்லோம். சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம் என்று வணங்கும் போது சிவபெருமானே முழு முதல் தெய்வம் என்பது பெறப்படுகிறது.

மேலும் 'ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்' என்ற பாடலின் கருத்து 'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்' என்ற சிவசித்தி யாரின் பாடலுக்கு விளக்கமாக அமைந் துள்ளது. 'எல்லாம் சிவனென ஆனாய் போற்றி' எனும் போது இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சிவன் தான் என்பது தெளிவாகிறது. சிவபெருமான் ஓசை ஒலியெலாமாகி ஓங்காரத்து உட் பொருளாகி, பெண்ணாகி, ஆணாகி, பிறப்பிலியாகி எல்லா உலகுமாக ஞானச் சுடர் விளக்காகி, ஆவினில் ஐந்தும் ஆடி, உலகுக்கு ஒருவனாய் நின்று, பேசப்பெரி தும் இனியனாகி, மனந்திருந்த கருத்தாகி கருத்தறிந்து முடிப்பானாகி, தூயானாகி சேயோனாகி,அருந்துணையாகி, அருமருந் தாகி, பேராயிரம் பரவி, வாராத செல்வம் வருவிப்பானாகி, பக்தனாகி, சித்தனாகி, அத்தனாகி, முத்தனாகி, அம்மையப் பனாகி, தூண்டு சுடரனைய சோதியாகி, சூளாமணியாகி, காண்டற்கரிய கடவு

ளாகி, கருதுவார்க் காற்ற எளியனாகி, வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகி, பர லோக நெறிகாட்டும் பரமனாகி, பொய்யி லியாகி, நினைப்பவர் தம்வினைப்பாரம் அழிப்பானாகி, மந்திரமாகி தந்திரமாகி, மருந்துமாகி, தீராத நோய் தீர்த்தருள வல்லானாகி, பொன்னும் மெய்ப்பொரு ளும் தருவானாகி, இன்னதன்மையன் என்று அறிய முடியாதவனாகி, ஆனால் எளிவந்த பிரானாகி, கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியனாகி என்றெல்லாம் தேவார ஆசிரியர்கள் உயிரோடு மற்றும் உலகோடு தொடர்புபடுத்தி அனுபவத்தில் கண்டார்கள். சுந்தரர் தேவாரத்தில்

மாதினுக்கு உடம்பு கொடுத்தானை
மணியினைப் பணிவார் வினைகெடுக்கும்
வேதனை வேதவேள்வியர் வணங்கும்
விமலனை அடியேற்கு எளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டினன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என்னிலைக்கேனே.

என்ற பாடலில் சிவபெருமான் இனிய நண்பனாக மாறுகிறார்.

ஒவ்வொரு பதிகத்திலும் சிவனது அருட்சிறப்புக்கள், திருவிளையாடல்கள். புராணச்செய்திகள் அடியார்கட்கு அரு ளிய அற்புத நிகழ்ச்சிகள், சோதனைகள், அங்கவர்ணனைகள், வழிபாட்டு முறை கள், தத்துவவிசாரணைகள் முதலியன இடம் பெறுகின்றன. சித்தாந்த நெறிவாழ் வில் ஈடுபடவிழையும் அன்பர்கள் சிவபெருமான் பற்றிய அனைத்துச் செய்திகளையும் படித்து உணர்ந்தாலும் ஒன்றை மட்டும் உறுதியாகவும், இறுதி யாகவும் நம்பிக்கையுடனும் மனத்தில் வைக்கவேண்டும்.

அதுதான் திருவருள். 'தோன்றாத் துணையாக' இருந்து நம்மைக் காத் தருளி நன்னெறியில் உய்விப்பது ஈசனின் திருவருள் ஒன்றே என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவன் ஆட்டுவிக்க நாம் ஆடுகின்றோம்.

அவன் அடக்குவிக்கின்றான் நாம் அடங்குகின்றோம்.
அவன் ஓட்டுவிக்கின்றான் நாம் ஓடுகின்றோம்
அவன் உருகுவிக்கின்றான் நாம் உருகுகின்றோம்
அவன் பாட்டுவிக்கின்றான் நாம் பாடுகின்றோம்
அவன் பணிவிக்கின்றான் நாம் பணிகின்றோம்
அவன் காட்டுவிக்கின்றான் நாம் காண்கின்றோம்

நெற்றிக்கண்ணன் சிவபெருமான் உள்ளிருந்து உணர்த்திக்காட்ட ஆன்மா உடனிருந்து அறிதிஎன்று காண்பது தான் திருக்காட்சி. அப்பர் சுவாமிகள் பாடுகின்றார்.

மன்னிப்பவனே வெற்றி பெறுகிறான்.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்போக்கித்
தெள்ளியேனாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்று எல்லாம் உடனிருந்து அறிதி
என்று வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே.

முதலில் நம்மை நன்றாக அறிந்து கொண்டு நமது தலைவனை நன்றாகப் புரிந்து கொண்டு அவனது திருவருளே நம்மை எப்போதும் காத்து நிற்கிறது. என்பதை உணர்ந்தால் ஞானம் பிறக்கும். ஞானம் என்பது மோன வரம்பு. ஞானம் பெற்றபின் செலுத்தப்படும் அன்பும் வழிபாடும் தூய்மையானதாக இருக்கும். எனவே தான் சித்தாந்த நெறியில் ஞானம் ஈசன் பால் அன்பே என வலியுறுத்தப்படுகிறது. ஈசன் வேறு திருவருள் வேறு அல்ல. திருவருள் உணர்ந்த ஆன்மா உணர்கிறது. என்றாலும் திருவருள் எவ்வாறு செயற்படுகிறது என்பதை அளவையியல் வழியிற் புரிந்து கொள்ள இயலாது. அனுபவ வழியில் தான் உணர்ந்து கொள்ள முடியும் என்கிறார் சம்பந்தர் 'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா' என்றும் 'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதியன் என்றும் கூறும் போதும் சிவபரம்பொருள் மனம், வாக்கு, காயத்திற்கு எட்டாத நிலையில் இருந்தாலும் அகத்தில் ஞானச்சுடர் விளக்காய் நின்று அருள்பாலிக்கின்றான்.

எனவே, அளவிடற்கரிய பரம்பொருள் தன் அருள் வெளியில் நம்மை ஆட்கொண்டு உய்விக்க அருள் வடிவில் நின்று உணர்த்துகின்றார். இம்மையில் வாழ்வாங்கு வாழச் சோறும் கூறையும் தந்தருளி நாம் உள்ளன்போடு தொழுது தூமலர் தூவிஅழுது நின்று கா்முற்று அரற்றி வழிபட்டால் நம்மைக் கொள்கையினால் உயர்ந்த நிறைவுடையவர்களாக்கி நம் இடர்களைக் களைந்து அம்மையில் சிவலோகம் ஆள்வதற்கு வழிவகுப்பான் என்பதில் ஐயமில்லை என்பதே பதி உண்மை.

## நித்தமும் அவனின் திருநடனம் நிகழ்ந்திடும் இடமே சிற்றம்பலம்

ஐந்தொழில் புரியும் அம்பலவன்
ஆன்ம ஈடேற்றம் செய்கின்றான்
நித்தமும் அவனின் திருநடனம்
நிகழ்ந்திடும் இடமே சிற்றம்பலம்
சிந்தையிற் சிவனை நினைந்திட்டால்
சேர்ந்திடும் பேறு வீடாகும்
வந்திடும் வினைகள் எல்லாமே
மறைந்திடும் அவனின் அருளாலே

-கவிஞர் வ. யோகானந்தசிவம்-

மன்னிப்பதைவிட மறப்பது நன்று.

உ

# எட்டுமிரண்டும்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

எட்டும் இரண்டும் எட்டுமிரண்டும் என வரும். எட்டு ஒரு எண். இரண்டும் அவ்வண்ணமே. எட்டும் என்ற நிலை மொழியுடன் இரண்டு என்னும் வருமொழி புணரும்போது எட்டுமிரண்டும் எனவரும். நிலைமொழியின் ஈற்றிலுள்ள மகர ஒற்று வருமொழியான (இரண்டு) இரண்டின் இகரத்துடன்சேரும் போது, உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவதியல்பே என்ற நன் னூற் சூத்திரத்துக்கமைய 'மி' என்ற உயிர்மெய் தோன்ற எட்டும் இரண்டும், எட்டுமிரண்டெனவரும்.

பாலும் நெய்யும் உடலுக்குறுதி
வேலும் வாளும் அடலுக்குறுதி
ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.

என்னும் பாடலின் ஈற்றிலமைந்த நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளையும் சுட்டும். இவையிரண்டும் கீழ்க்கணக்கில் வருவன. மனிதவிழுமியங்களை மேம்பாடுகளைக் கட்டியெழுப்ப இப்பொருள் ஆழமுள்ள நூல்களை ஒவ்வொருவரும் பயிலல் மேம் பாட்டைத் தரும். இதேபோன்று அஞ்சும் (ஐந்து) மூண்டும் உண்டானால் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாளென்றோர் பழ மொழியும் உண்டு. மூன்றென்பது அடுப் புக்கால். ஐந்து பஞ்சபூதங்களைக் குறிக் கும். இவ்வியற்கையே நிலம், நீர், தீ, காற்று, ஆகாயத்தால் அமைந்தது. நீர், நெருப்பு, காற்று இன்றேல் சமையலேது. சாப்பாடேது. உப்பும், புளியும் கூட்டுப் பொருள்களே. இந்த எட்டுச் சோதிடத்தில் பெருந்தொல்லை கொடுக்கும் எண். அட்டமி, அட்டமத்துச்சனி, அட்டமத்து வியாழன், எட்டிற்செவ்வாய் இதற்குச் சிறந்த உதாரணங்கள். பெயரிலே கூட்டெண் பிறந்த எண் அமையக்கூடா தாம். மிலேனியமும் கொம்பியூட்டரும். செவ்வாய்ப்பயணமும் வந்தபின்னும் அதி மூடக் கொள்கைகள் எம் சமுதாயத்தை விட்டு அகலவே இல்லை. இவை மண் மூடிப் போகவேண்டும் என்றார் இராமலிங்கசுவாமிகள் சோதிடந்தனை இகழ் என்றார் பாரதி. அவை நல்ல என்றார் சம்பந்தர். இவ்வாறன்றி "எட்டும் இரண்டும்" என்ற தொடர் மிக உயர்ந்த பொருளமைவுடையது. திருவாசகப் பெரு நூலிலே இது எடுத்தாளப்பட்டிருக்கிறது.

கட்டறுத்தெனை ஆண்டுகண் ணாரநீறு
இட்ட அன்பரொடு யாவருங் காணவே

வருமுன் அறிபவன் புத்திசாலி.

பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடுஇரண் டும்அறி யேனையே.

திருச்சதகம் 49

பட்டிமண்டபம் - வாதசபை, அறங்கூறவையம்.

இதன்பொருள்:-

ஊர்தியாய் ஆனேற்றை உடையாய்! எட்டும் இரண்டும் சேர்ந்து பத்தாகும். அவ்வுயிர்க்குறிப்பு, 'சிவயநம' என்னும் ஐந்தெழுத்தில் நடுவணதாக, விளங்குவது உயிர் அடையாளமாகிய 'ய' கரமாகும். இவ்வுண்மையறிந்தவர் மெய்க்கல்வியுணர்ந்தவராவர். இவ்வுண்மை தெரியாத சிறியேனாகிய என்னைச் சமயக்கணக்கர் கூடும் கலைமன்றமாகிய பட்டி மண்டபத்தில், அவர்களை வென்று முன்னிருக்க அருளினை என்னுடைய பாசப்பிணிப்பை அறுத்தருளினை, திருநீறிட்ட மெய்யடியார்களும் ஏனையாருங்கண்டு உவகை கொள்ளுமாறு பட்டிமண்டபம் ஏற்றினை.

உரை:-

சித்தாந்தபண்டிதர் ப. இராமநாதபிள்ளை

சிவாயநம, நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரங்கள் சைவசமயிகளின் தாரகமாகும். இதேபோன்று ஆறெழுத்து மந்திரம் (சடாட்சரம் - சரவணபவ) எட்டெழுத்து மந்திரம் (ஓம் நாராயணாய நம்) பிரமாணிக்கமானவை. பஞ்சாட்சர மகிமையை நால்வரும் பாடியுள்ளனர். சிவாயநம - இது சூக்கும பஞ்சாட்சரம் நமசிவாய தூலபஞ்சாட்சரம். தூலம் வெளிப்படை, சூக்குமம் மறைவு. நமசிவாய வாழ்க எனத் திருவாசகம் துவங்கி ஓங்காரத்துட் பொருளை ஐயனெனக்கருளியவாறார் பெருவார் என்ற பிரணவத்துடன் நிறைவாகிறது. அச்சோப்பதிகம்7 இடையிலே நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன் (திருவேசறவு10) எனப்பாடியுள்ளார்கள் சுவாமிகள் தேவாரம் பஞ்சாட்சரமாகவும், திருவாசகம் பிரணவமாகவும் மதிக்கப்படுகிறது.

"சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்பது பிராட்டிவழி. அதுவே நல்வழி (15) வாக்கு. பின்னர் வந்த பட்டினத்துச் சுவாமிகள் "எல்லாம் சிவமயமே" என்றார். பிள்ளைகட்குச் சிவமயமென்று பெயர் வைத்த சைவப்பெருங்குடி மக்கள் தபால் எழுதும் போது சிவமயம் என்ற தலைப்போடு துவங்கினர். இன்றோ இடையித் தோன்றியவர்களின் திருநாமம் முதலிடம் பெறக்காணலாம். எல்லாரும் ஹீரோவாய் விட்டனர். அவர் வழிப்போவோர் சிவனை ஓரம்கட்டியும் விட்டனர். சிவனெனும் நாமந்தனக்கேயுடைய செம்மேனியெம்மானைப் பற்றிப்பிடித்தால் இவன் என்னை விடமாட்டானென்று அருள் புரிவானென அப்பர் கரைந்து பேசுகின்றார். சுவாமிகள் திருவாசத்திற் போற்றியோ நமசிவாய எனப்பிரணவத்தையும், பஞ்சாக்கரத்தையும் இணைத்துப் பாடியுள்ளார்.

நல்லமுகத்தை விட நல்ல புகழே மேல்.

போற்றியோம் நமச்சிவாய
புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய
புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோம் நமச்சிவாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய
சயசய போற்றி போற்றி

திருச்சதகம் 62

என்று பாடியுள்ளார்.

ஓம் என்ற மொழியின் வேறு பாடில்லதும், அதன் விரிவாயதும் ஆகிய ஓம் நமச்சிவாயனே காத்தருள்க, பாம் பைத் திருத்தியணியும் புயங்கனே மயங்குகின்றேன். ஓம் நமச்சிவாயனே காத்தருள்க, உன்னையன்றிப் பிறிதொரு புகலிடம் எளியேனுக்கு இல்லை. ஓம் நமச்சிவாயனே காத்தருள்க, அடியேனைப் புறத்தே போக்கிவிடுதல் ஆகாது. ஓம் நமச்சிவாயனே! வெற்றியோய்! வெற்றியோய்! காத்தருள்க.

உரை:- ப. இராமநாதபிள்ளை

பலசைவப் பெரியார்கள் மேடையிலும், அன்பர்களைக்காணும் போதும் ஓம் நமச்சிவாய என்று சொல்லும் பெருந் தன்மையுடையவர்களாய் இருக்கிறார்கள். இம்மந்திர விளக்கம் வருமாறு

ந - மறைப்பாற்றல் (மருள்)
ம - மும்மலங்கள் (இருள்)
சி - சிவபெருமான் (பதி)
வ - திருவருள் (சக்தி)
ய - உயிர் (ஆன்மா)

சிவாயநம என்பதற்கும் இதே போலப் பொருள் காண்க எட்டு என்பதைத் தமிழ்முறையில் 'அ' என எழுதுவர். 'உ' இரண்டைக்குறிக்கும். எட்டும் இரண்டும் பத்து. இதை 'ய' என்று எழுதுவர். ஆக எட்டும் இரண்டும் தான் 'ய'. 'ய' என்பது உயிர். சிவாயநம, நமசிவாய என்பதிலும் 'ய' வரும் நம் உடம்பில் அமைந்திருப்பது உயிர். உயிர்க்குயிரானவன் இறைவன். அந்த உண்மைப்பொருளே எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனோடு இரண்டறக் கலந்துபேரின்பம் அடைவதே இப்பிறப்பின் நோக்கம் என்பதை உணரவேண்டும்.

அகரம் எட்டு, உகரம் இரண்டு, எட்டும் இரண்டும் என்பதில்வரும் ம் (மகரம்) மூன்றும் சேரின் (அகரம் உகரம் மகரம்) பிரணவமான ஓம் வருகிறது. இதுவே ஓங்காரம். இதை உணரவேண்டும். இதுதான் எட்டும் இரண்டும் எனப்பொருள் கூறுபவரும் உள்ர். ஆக

எட்டும் இரண்டும் ஓங்காரமென்ற உண்மையை நாம் உணர எமக்கு உணர்த்த இப்பாசுரம் உபகாரியாகும். திருவாசகம் முற்றோதும் போது பொருள் உணர்ந்து படிக்க வேண்டும் என்ற உண்மையை உணரின் நமக்குள்ளே நாம் படித்துக் கொண்டே இருக்கலாம்.

இந்தப் பொருள்பட வரும் பாடல்களையும் சேர்த்துப்பொருள் உணர்ந்து படிப்போமாக.

எட்டும் இரண்டும் அறியாத என்னை
எட்டும் இரண்டும் அறிவித்தான் என்நந்தி
எட்டும் இரண்டும் அறிவால் அறிந்தபின்
எட்டும் இரண்டும் இலிங்கம் தாமே.

திருமந்திரம் 3070

எட்டிரண்டும் அறியாத என்செவியில்
எட்டிரண்டும் இதுவாம் இலிங்கமென
எட்டிரண்டும் வெளியாய் மொழிந்த குருமுருகனே
எட்டிரண்டு திசையோடச் செங்குருதி
எட்டிரண்டு உருவாகி வஞ்சகர்மேல்
எட்டிரண்டு திசையோர்கள் பொன்ற அயில் விடுவோனே

திருப்புகழ் 634

திருவாசகம் சிவமயமாக்கும் அதுவே இவ்வுயிரின் இலக்கு
'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.'

கோபப்படாமல் இருந்து கோபத்தை வெல்லவேண்டும். நம்முடைய நல்லொழுக்கத்தால் தீயவனை வெல்லவேண்டும். கருமியை தானத்தால் வெல்லவேண்டும். பொய்யைச் சத்தியத்தால் வெல்லவேண்டும்.

சாதுக்களிடமும் பெண்களிடமும் பசுக்களிடமும் தங்கள் சூரத்தனத்தைக் காண்பிப்பவர்கள் உலகில் இருந்து பழுத்த பழம் கீழே விழுவது போல் விழுவார்கள். அறிவாளிகள் சூதாடமாட்டார்கள்.

அதிகப்பொருள் சேர்த்தல், பிறர்வளம்கண்டு பொறாமைப்படல், கருமித்தனம், பொருளாசைகளால் இயலாத பணிகளை ஏற்றல் ஆகியவை துன்பம் தரக்கூடியவை.

முகம் நெஞ்சைக் காட்டும் கண்ணாடி.

உ

# இணுவையூர் சின்னத்தம்பிப்புலவர்

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

சீர்மேவும் இணுவைப் பேரூரில் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் சிறப்பாக வாழ்ந்தவர் சிதம்பரநாதன் என்னும் உத்தமர். இவர் செய்த நற்றவத்தால் பிறந்தவர் கதிர்காமசேகர் மானா முதலியார் என இயற்பெயர் கொண்ட சின்னத்தம்பிப்புலவர்.

இவர் சிறு பராயத்தில் அரும் புதல்வனாக இருந்த காரணமாகச் சின்னத்தம்பி என அழைக்கப்பட்டார். சின்னத்தம்பி தமது முற்பிறப்பில் தேடி வைத்தகல்விச்செல்வம் இவருக்கு உறுதுணையாக இருந்ததால் ஆரம்பக்கல்வியிலிருந்தே கல்வித்தாய் இவரை அணி செய்தாள். நற்றமிழையும் இலக்கண இலக்கிய வரம்புகளுக்கமைய நன்கு கற்றவர். சிறந்த தெய்வபக்தியும் உடையவர். இவர் சிறுவயதிலிருந்தே கவிபாடும் ஆற்றல் மிக்கவராய் இருந்ததால் இவரை யாவரும் சின்னத்தம்பிப்புலவர் என்று அழைத்தனர். இவரது குலதெய்வமான இணுவில் சிவகாமியம்பாளிடம் ஆழ்ந்த பக்தியுடையவர். அன்னை சிவகாமி நன்கு கவிபாட இவருக்கு அருள் சொரிந்தாள். இவர் பல பாடல்களைப்பாடி அதிகாலை வணக்கத்துடன் அன்னைக்குத் தூயமலர் சூட்டிப்பாமாலையையும் அணிவிக்கத்தவறுவதில்லை. நாளிலும் பொழுதிலும் உள்ளன்போடு வழிபட்ட சின்னத்தம்பிப்புலவருக்குச் அன்னை சிவகாமியின் கடைக்கண்பார்வை பல முன்னேற்றங்களையும் கொடுத்தது.இவர் ஒல்லாந்தரது ஆட்சியில் தோம்பு எழுதும் பணியில் அமர்ந்தார் யாரோ கொடுத்த பொய்த்தகவல் காரணமாக இவர் ஒல்லாந்தரின் சிறையில் அடைக்கப்பட்டார். தமது மன வேதனையால் அன்னை சிவகாமியை வேண்டிப்பாடித் தமது துயரைத் தீர்க்கும்படி வேண்டினார் முதலில் கருணாகரப் பிள்ளையாரையும் தொடர்ந்து சிவகாமி அம்பாளையும் துதித்துப்பாடினார். அடுத்தபாடல்களில் தமது கஷ்டமான நிலையைக் கூறிய புலவர் "இதுவரை என்னை ஆதரித்து அருளிய அன்னையே இக்கொடிய சிறையிலிருந்து விடுவிப்பாய்" என்று ஏழாவது பாட்டில் மனமுருகினார் ஏழாவது பாட்டில் "துப்பூட்டுமென்றனது துள்ளார்தாம் சிறைப்படுத்தும் அப்பூட்டும் தீயவர் தம் அரியசிறை வீட்டிலிருக்கும் இப்பூட்டும் நிர்ப்பூட்டாயென் சிறையை நீக்கியருள் செப்பூட்டுத் திருப்பொற்றாட் சிவகாமசுந்தரியே" என்று பாடியதும் புலவர் அடைக்கப்பட்டிருந்த சிறைக் கதவு தானாகத் திறந்தது. இதனையறிந்த சிறை அதிகாரி புலவரை வணங்கிச் சிறையிலிருந்து விடுவித்தான். புலவரது எட்டாவது பாடலினால் பொய்த் தகவல் கொடுத்தவன் புலவர் இருந்த சிறையில் அடைக்கப்பட்டான். புலவர் மிகுதி இரு பாடலையும் பாடிச் "சிறை நீக்கிய" பதிகத்தைப்பாடி முடித்தார். அன்னை சிவகாமியின் திருவருளால் சிறைக்கதவு

திறக்கப்பாடிய சின்னத்தம்பிப்புலவரின் பெருமையும் இணுவில் சிவகாமி அம்பாளின் அற்புதமும் திக்கெட்டும் பரவியன.

சின்னத்தம்பிப்புலவர் இணுவைச் சிவகாமியம்மைத்தமிழ் என்னும் நூலில் சிறை நீக்கியபடலம், சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், சிவகாமியம்மைதுதி, சிவகாமியம்மை திருவூஞ்சல் என்னும் நான்கு பகுதிகளையும் மிகவும் இனிமை யாகப்பாடியுள்ளார். மேலும் பஞ்சவர்ணத் தூது நொண்டிநாடகம், கோவலன் நாட கம், என்னும் பல இனிய நூல்களையும் பாடியுள்ளார். இவரால் எழுதப்பட்ட பல நாடகங்கள் இவ்வூர்க்கலைஞர்களால் மேடையேற்றப்பட்டன. மட்டக்களப்பு கலா மன்றத்தாலும் இவரது நூல்கள் வெளி யிடப்பட்டன. இயற்கையாகவே தமக்கு கஷ்டங்கள் நேரும் பொழு தெல்லாம் தமது குலதெய்வமான இணுவில் சிவகாமியம்பாளிடம் அன்புருகப்பாடி விடிவு கண்டவர். இவர் வேண்டுதல் செய்து அக்காலத்தில் போதிய வசதி களற்றிருந்தபோதும் தமது ஆழ்ந்த பக்தி யால் இனியபாடல்களைப்பாடி நற்பலன் பெற்ற இணுவில் சின்னத்தம்பிப்புலவரின் புலமையால் இணுவில் கிராமமும் நாடும் பெருமையடைகின்றன..

இன்று சமயத்திற்கு ஒவ்வாத விடயங்கள் சமூகத்தில் மலிந்து விட்டன. மாணவர்களுக்கு பாடசாலையில் சமயம் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டாலும் அது அவர்களது வாழக்கைக்கு எந்தளவிற்கு உதவுகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. சமய நிகழ்வுகளில் மாணவர்கள் பங்கு கொண்டாலும் பெரும்பாலான மாணவர்கள் அதனை ஒரு விழாவாகவே கருதுகின்றனர். அந்த நிகழ்வுகளின் அலங்காரச் செயற்பாடுகளில் மட்டும் அக்கறை காட்டுகின்றனரே தவிர அங்கே இடம்பெறும் ஆராதனைகளில் அக்கறையுடன் பங்குபற்றாத நிலமைகளையே நாம் காணமுடிகின்றது.

இதேபோன்று சமூகத்தில் அதிகளவான மக்கள் ஒன்றுகூடுகின்ற சில சமயவிழாக்களை சிலர் பொழுது போக்கிற்காகவே மட்டும் பயன்படுத்துகின்ற தன்மை சமூகத்திலும் அதிகரித்து விடுகின்றது.

சமயத்தினூடாகவே எமது வாழ்க்கையை நாம் சீரானதாகவும் சிறப்பானதாகவும் அமைத்து செம்மையான வாழ்க்கையை இவ்வுலகில் வாழமுடியும் என்ற உண்மையை நாம் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும். அத்துடன் தினமும் சமயச் செயற்பாட்டிற்காக குறிப்பிட்டளவு நேரத்தைச் செலவு செய்ய நாமும் பழகி எமது பிள்ளைகளுக்கும் அவற்றைப் பயிற்றுவிக்கவேண்டும்.

-ஐப்பசிமாத மலர்வெளியீட்டில் ஆசிரியர் இரா. ஸ்ரீநடராசா-

நல்ல அண்டைவீட்டுக்காரன் விலைமதிப்பற்றவன்.

உ

# அருணகிரிசுவாமிகள் அருளிய கந்தரலங்காரம்



பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்

## ஞானத்திருவடி வேண்டுதல்

தெள்ளிய வேனலிற் கிள்ளையை, கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் றாள்வேட் டிலைசிறு வள்ளை தள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே.

பெண்களின் சிறிய வள்ளைக்கொடி போன்ற காதினை மறைத்துத் துள்ளுகின்ற கெண்டை மீன்போன்ற நீண்ட காதளவோடிய நீண்ட கண்களையும், கொவ்வைக் கனிபோன்ற சிவந்த உதட்டினையும், ஆடவரை மயங்கவைக்கும் வஞ்சக வார்த்தைகளையும், வெண்மையான முத்துப்போன்ற ஒளியுடைய பல்லுடன் கூடிய புன்முறுவலையும் விரும்பி அலைகின்ற மனமே! தெளிவு பெற்ற தினைப்புனத்தைக் காவல் புரிந்த கிளியை ஒத்த உள்ளத்தைக் கவரும் இளங்குமரியாகிய வள்ளியம்மையை விரும்பிய முருகனுடைய திருவடிகளை விரும்பினாயில்லை. (ஏனல் - தினை, வள்ளை - காது, கெண்டை - கண், வித்தாரம் - விரிவு)

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்கிரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

பழைமையாகிய பெரிய பூமியைப் பன்றி வடிவங்கொண்டு அகழ்ந்தவராகிய திருமாலின் மருமகனாகிய முருகன் எனும் அருளுக்கு உறைவிடமாக இருப்பவனின் உபதேசக் கேள்வியினால் (உபதேசத்தால்) பரமானந்தம் இத்தகையது என்று கூறுதற்கு இல்லை. ஒப்பற்ற ஞானவெளியிலே தோன்றி வருவதாகிய உண்மையானது யான், தான் என்னும் அகங்காரம் கெட்டால் அல்லாமல் எவருக்கும் புலப்படாது எவ்வளவு கற்றாலும் கேள்வியாலேயே ஞானம் வரும். "கற்றிலனாயினும் கேட்க" என்பது குறள்.

எதிலும் திருப்தி இல்லாதவனுக்கு அதிகம் தேவைப்படும்.

## மயிலின் பெருமை

தடக்கொற்ற வேண்மயி லேயிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்தும்நின் தோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப் புறத்தும் கனகசக்ரத்
திடற்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே!

மிகுந்த வெற்றிபொருந்திய முருகக்கடவுளின் மயிலே! தேவர்களுக்கு அவுணரால் வந்த தொல்லை தீர்ந்தபின் உன்னைச் சுயேச்சையாக விட்டுவிட்டால் நீ வடதிசையிலுள்ள மேருமலைக்கு அப்பாலும், சூரியமண்டலத்திற்கு அப்பாலும், எல்லாத் திசைகளுக்கும் அப்பாலும், உனது தோகையினாற் சுழன்று பறந்து பெரும்புறக் கடலுக்கு அப்பாலும் பொன்மயமான சக்கரவாள கிரிக்கு அப்பாலும் உலாவுவாய். (தடம் - விசாலம், இடர் - துன்பம், திடர் - மேடு. மலை)

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
யாலித் தனந்தன் பணாமுடி தாக்க வதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கும் மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

சேல்மீன்கள் விளங்குகின்ற வயல்கள் பொருந்திய திருச்செங்கோடெனும் திருப்பதியில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் வாகனமாகிய செழுமையான கலாபத்தையுடைய மயிலானது ஒலித்து ஆதிசேடனின் ஆயிரம் தலைகளைத் தாக்கவும், அதிர்ந்து அதிர்ந்து இரத்தினக் கற்களும் உலகைக் காக்கும் திருமாலும் அவன் கரத்திலுள்ள சக்கராயுதமும் பாஞ்சசன்னியம் என்னும் சங்கும் மயிலின் காற்கீழ்ப் பட்டுக் கிடப்பனவாகும்.

(தொடரும்...

### விபூதி (திருநீறு)

விபூதி என்பதற்கு ஐஸ்வர்யம் என்று பெயர். சிவனின் திருமேனியில் தோன்றியது விபூதி, வி - மேலான, பூதி - செல்வம். இதனை அணிபவருக்கு மேலான செல்வத்தைக் கொடுக்கும்.

தீவினைகளை நீறு படுத்துவதால் திருநீறு எனவும், அழியாத செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனவும், ஆன்மாக்களிடம் உள்ள மலமாசைக் கழுவுவதால் சாரமென்றும், அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் பஸிதம் எனவும் பெயர்.

உ

# முன்னோர் வகுத்த பண்பாடுகள் மூடவழக்கமல்ல. பயனுள்ள நடைமுறைகளே.

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரின் புதல்வர் வித்துவான் வேலன் அவர்களால் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழ்மன்ற நிகழ்வில் மேற்படி தலைப்பின் கீழ் 1965ஆம் ஆண்டு சொற்பொழிவு ஆற்றப்பட்டது. சைவத்தமிழ் மக்களாற் கடைப்பிடிக்கப்படும். சமூகப் பழக்க வழக்கங்கள், அவர்களாற் பயன் படுத்தப்படும் பொருட்களின் பயன்கள் விஞ்ஞான இரீதியான ஆய்வின் பின் அவற்றின் சிறப்பான தன்மைகள் நிருபணமாகியுள்ளன.

ஆறுமுகநாவலர் ஆலயத்திற்குச் செல்லும் போதும், நாளாந்த வாழ்விலும் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளைச் சைவவினாவிடை நூல்கள் மூலம் கூறியுள்ளார். அவ்வாறு நடக்க வேண்டியதற்கான காரணங்களை, காரணம் தெரியாமையினால் மூடக்கொள்கை என ஒதுக்குவாரும் உளர்.

ஆலயங்களில் நடைபெறும் சகல கிரியைகளிலும் தூய்மை பேணப்படுகின்றது. ஆலயம் செல்வோருக்கு உளத் தூய்மையுடன் உடற்றூய்மையும் அவசியம். கோயில்களில் சோடனைகள் மனத்தைக் கவர்ந்து புத்துணர்வை ஏற்படுத்துவதால் மன அழுத்தம் நீங்குகின்றது. எம்முடலில் சமிபாட்டு உறுப்புக்கள் தொடர்ந்து செயற்படுகின்றன. விரதமிருப்பதனால் இவ் உறுப்புக்கள் தேய்வுநீங்கி புதுப்பிக்கப்படுகின்றன. உடலிலுள்ள கொழுப்பு, சீனித்தன்மைகள் குறைந்து உடல் சமனிலை பெறுகின்றது. காவடி எடுப்பவர்கள் உடலில் ஊசிகளினை ஏற்றுவதனால் வாதம், நரம்பியல் நோய்களிலிருந்து காக்கப்படுகின்றார்கள். இது அக்குபஞ்சர் சிகிச்சைக்கு ஒப்பானது. சாஷ்டாங்க நமஸ்காரம், அங்கப்பிரதிஷ்டை, உடலிற்கு உவப்பானவை.

திருமணச்சடங்குகளில் பால் அறுகுவைப்பதிலிருந்து சாந்திவரை அற்புதமான காரணங்களை உள்ளடக்கி சடங்கு முறை வகுக்கப்பட்டுள்ளது. இதனால் தூய்மைபேணல், அந்நியோன்யம், தாழ்வுமனப்பான்மை நீங்கல், விட்டுக் கொடுத்தல், மூத்தோரை மதித்தல், கூட்டுறவு போன்றவை செயற்படுத்தப் படுகின்றன. யாகம் செய்வதால் மலட்டுத் தன்மை நீங்குவதாகக் கூறப்படுகின்றது.

மரணச்சடங்குகளில் சூழல் மாசுறாது காப்பது பிரதான அம்சமாக உள்ளது. இறந்தவரிடமிருந்து பிறருக்கு நோய் தொற்றாதிருப்பதற்கான வழிமுறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. மஞ்சள் நீராற் குளிப்பாட்டல், சுண்ணமிடித்து வாய்க்கரிசியிடல், இறந்தவரின் உடலைச் சூழ கர்ப்பூரம் எரித்தல், சுடுகாட்டில் தகனஞ் செய்தல், தகனத்தின் பின் வீடுவருபவர்கள் வாயிலில் வைத்து கால் கழுவுதல், வேப்பிலை மெல்லுதற்காகக் கொடுத்தல் என்பவை மாசு நீக்கும் சடங்குகளாகும். தொடக்குக்காத்தல்

என்பது நோய்க் காவிகளாகக் குடும்ப அங்கத்தவர்கள் செயற்படுதலைத் தவிர்ப் பதாகும். இது ஜனன வீட்டிற்கும் பொருத்தமானதே. இங்கு தாயும் சேயும் அந்நியரால் நோய்த் தொற்றுக்குள்ளா வது தடுக்கப்படுகின்றது.

சாதாரணமாக வீடுகளில் பிர யாணத்தின் பின் வீட்டில் நுழையும்போது கை, கால் அலம்புவது வீட்டுத் தூய்மை பேணும் நோக்குடனே. யாம் தலைமுடி வெட்டிய பின் வீட்டினுள் நுழைவதற்கோ, கிணற்றில் நீர் அள்ளுவதற்கோ முதி யோர்கள் அனுமதிப்பதில்லை. தலை முடி, உணவில், நீரில் சேர்வது ஆபத் தானது. குடல்வளரிநோய் (அப்பெண்ரி சைட்) ஏற்பட்டு மரணம் கூடச் சம்பவிக்க இடமுண்டு என்பதே இதற்கான காரணம்.

எம்மாற் பயன்படுத்தப்படும் சிவ சின்னங்களில் பிரதானமாக அமைவது விபூதி. சுட்ட சாணம் கிருமிகளை அழிக் கும் ஆற்றல் மிக்கது. இதனால் உடல் உஷ்ணம் பாதுகாத்தல், தூய்மை, நோய் நீக்கம் போன்ற பயன்களும் உள்ளன. நெற்றியில் விபூதி அணிவதால் சுவாசத் தின் போது கிருமிகள் உள்ளெடுக்கப் படுவது தவிர்க்கப்படுகின்றது. இதனை வாயிலிடுவதால் குடல்நோய்கள் நீங்கு வதாகக் கருதப்படுகின்றது. விபூதியின் இப்பண்புகளின் தொகுப்பாகவே சம்பந்தப் பெருமானின் திருநீற்றுப்பதிகம் அமைந் துள்ளது.

விபூதியினை அடுத்து சந்தனம் சகல சடங்குகளிலும் முக்கிய இடம் பெறுகின்றது. சந்தனம் உடலிற்குக் குளிரூட்டும் தன்மை மிக்கது. எமது நரம்புத்தொகுதியின் மையம் நெற்றிப் பொட்டில் அமைந்துள்ளது. எனவே நெற்றிப்பொட்டில் சந்தனம் இடுவதனால் உடல்முழுவதும் புத்துணர்வு பெறுகின் றது. கோபம், சலிப்பு தவிர்க்கப்படு கின்றன. குங்குமம் மங்கலப்பொருளாகப் பயன்படுகின்றது. உளவியல் வைத்தியர் கள் மனோவசியம் செய்யும் போது நெற்றிப்பொட்டைக் குறிவைத்துப் பார்ப் பதன் மூலம் நோயாளியைத் தம்வசப் படுத்துகிறார்கள். இங்கு நெற்றிப்பொட்டில் குங்குமம் வைப்பவர்களைத் தம்வசப் படுத்த முடியாது. பெண்கள் நெற்றி உச்சி வகிடு, கீழ்கழுத்தில் குங்குமம் அணிகிறார்கள். இதனால் பிறர்பார்வை உடலின் வேறுபாகங்களினை நோக்காது நெற்றிக் குங்குமத்திலேயே வசப்படு கின்றது. அத்துடன் இதன் நிறம் திருஷ்டிப்பரிகாரமுடையதாகவும், பயபக்தி ஏற்படுத்த வல்லதாகவும் அமைகின்றது. குங்குமத்தின் மூலப்பொருள் மஞ்சள், மஞ்சள் கிருமிகொல்லிகளில் முதன்மை யானது. அத்துடன் உணவுகளின் நிறம், சுவை, தூய்மை என்பவற்றையும் பேண வல்லது. தோல் நோய்களை நீக்குவதுடன் உரோமங்களை அகற்றுவதற்கும் இம் மஞ்சள் பயன்படுத்தப்படுகின்றது. கர்ப் பூரம், சாம்பிராணி, குங்கிலியம் போன்ற தூபப் பொருட்கள் சூழல்தூய்மை பேண வல்லன. இந்தியாவில் போபால் தொழிற் சாலையிலிருந்து எழுந்த விஷவாயுக் கசிவின் போது மேற்படி தூபப்பொருள்கள் பயன்படுத்தப்பட்ட வீடுகளிலிருந்தோர் பாதிப்புறவில்லை எனும் பத்திரிகைச் செய்திகள் இதற்குச் சான்று பகர்வனவாக

பணத்தை ஏவலனாக வைத்திருக்காவிட்டால் அது உன் எஜமானனாகி விடும்

அமைகின்றன. எமது சுகவாழ்வுக்கான வழிகளாக இச்சடங்குகளும் பழக்கவழக் கங்களும் அமைந்திருப்பினும், இவற்றை முறையாகக் கடைப்பிடிக்காத இடத்து அவை பயன்தரா. கலப்படமான போலித் திரவியங்களின் பாவனை அதாவது உமிச்சாம்பலை விபூதியாகக் கொள் வதும், நிறமூட்டப்பட்ட மாவகைகளைக் குங்குமம் என அணிவதும், சர்க்கரைப் பாகினைத் தேன் என பயன்படுத்துவதும் நம்மிடையே அதிகரித்துள்ளன. இவை பாரிய எதிர்விளைவுகளை நம்மிடையே ஏற்படுத்தவல்லன. நம்முன்னோர் எமக்கு விட்டுச் சென்ற இக்கலாசாரப் பண்புகள் காரணகாரிய நோக்குடனே வகுக்கப்பட்ட வையே. இவற்றை மூடவழக்கங்கள் எனக் கருதிக் கைவிடுவது எமது அடையாளத்தை நாமே இழப்பதுடன் எம் வாழ்வைத் தீயவழிகளில் இட்டுச்செல்ல வும் வழிவகுக்கின்றது. எம்முன்னோர் களின் இத்தகைய வாழ்வியல் அனுபவ மூலமாகக் கண்டறியப்பட்ட உண்மை களை வருங்காலத்து வளரும் சமுதாயத் தவர்கள் பின்பற்றிக்கொள்ள ஊக்கு வித்தல் நம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

## அகிலஇலங்கைத் தமிழ்த்தினப் போட்டி 2005

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியின் வில்லிசை நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளது. இதன் காரணமாக இப்போட்டி வெற்றிக்கான தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொள்வதுடன் கடந்த மூன்று தடவைகளாக தொடர்ந்து வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று வருவதினால் தேசிய மட்ட வெற்றிக் கேடயத்தையும் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

இவ்வில்லுப்பாட்டு நிகழ்வை எழுதி நெறிப்படுத்தி வருபவர் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி ஆவார்.

மேற்படி வில்லுப்பாட்டு நிகழ்வு இலங்கை. ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலும் ரூபவாகினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தாலும் ஒலி, ஒளி பரப்பப்பட இருப்பதுடன் கொழும்பின் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டு வருகிறது.

## சாமான்ய தர்மங்கள்

அஹிம்சை, சத்யம், அஸ்தேயம், சௌசம், இந்திரிய நிக்ரகம், இசை சாமான்ய தர்மங்கள் எனப்படும்.

அஹிம்சை:- பிற உயிர்களை துன்புறுத்தாமை.
சத்யம்:- எப்போதும் உண்மை பேசுவது.
அஸ்தேயம்:- பிறர் பொருளுக்கு ஆசைப்படாதது.
சௌசம்:- தூய்மையோடு இருப்பது.
இந்திரிய நிக்ரகம்:- புலனடக்கத்தை பின்பற்றுவது.

மனத்திற்கு ஆயிரம் கண்கள் உண்டு. இதயத்திற்கு ஒன்றே ஒன்று.

உ

(தொடர்ச்சி..

# தலப்பெருமைகளுடன் சம்பந்தரின் தெய்வப் பணிகள்

மாலினி குணரத்தினம் அவர்கள்

## 12) திருவியலூர்

திருமங்கலக்குடியை வணங்கிய சம்பந்தர் திருவியலூருக்கு எழுந்தருளி இறைவனை வணங்கியவராய்க் "குரவங்கமழ்" என்னும் இன்னிசைகூடும் இத்தமிழப் பதிகத்தைப் பாடஇறைவன் அவருக்கு அருளார் திருவேடங்காட்டியருளினார். இதனைச் சம்பந்தர் தமது ஐந்தாம் பாட்டில் கண்ணார் தரும் உருவாக்கிய கடவுள் என்றும், ஒன்பதாம் பாட்டில் "உருவம் விளம்ப அருள் செய்தான்" என்றும் குறித்தருளு கிறார்கள்.

"குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றத னுரியையுட லணிவோன்
அரவும் அலை புனலும்இள மதியும் நகுதலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர் வியலூரே"

## 13) திருக்கொடுங்குன்றம்

பாண்டியநாடு செல்வதற்கு நினைத்த ஆளுடைய பிள்ளையார், நதிகள் பலவற்றையுந் தாண்டி, காட்டுவழிகளையும் கடந்து, திருக்கொடுங்குன்றத்தை அடைந்தார்கள். அங்கு எழுந்தருளியுள்ள கொழும்பவளச் செழுங்குன்றை வணங்கி "வானிற்பொலி" என்னும் பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

திருக்கொடுங்குன்றமானது பிரான்மலை என இக்காலத்தில் வழங்குகின்றது. இங்குள்ள இறைவன் பெயர்கொடுங்குன்றீசர். தேவியார் குயிலமுத நாயகி. மகோதர மகரிஷியும், நாகராஜனும் வழிபட்ட தலமும் இதுவே ஆகும். அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியத் தலமுமாகும். மலைமேல் உள்ள வைரவர் சந்நிதி மிகவிசேஷம். சுவாமி சந்நிதியில் திருக்கல்யாணக் கோலம் சிறப்பானகாட்சி. தேவசபாமண்டபம் என்ற ஒரு மண்டபமும் இருக்கின்றது.

இத்தலத்தைப்பற்றி இருபத்தொரு கல்வெட்டுக்கள் 1903ஆம் ஆண்டில் படியெடுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் எட்டுக் கல்வெட்டுக்கள் ஆராய்ந்து முடிபு கட்டப் பெற்றன. இத்தலத்தில் சுந்தரபாண்டியன் மண்டபம், ஆறுகால் மண்டபம், லக்ஷ்மி மண்டபம் முதலிய மண்டபங்களும் விசுவநாதர்கோவில், சுப்பிரமணியசுவாமி கோவில் முதலியனவும் உள்ளன.

"வானிற் பொலி வெய்தும்மழை மேகங்கிழித்தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற் கொடுங்குன்றம்
ஆனிற் பொலியைந்தும் அமர்ந் தாடியுலகேத்தத்
தேனிற்பொலி மொழியாளோடு மேயான்றிருநகரே"

## 14) திருநெய்த்தானம்

பெரும்புலியூர் முதலிய தலங்களை வணங்கியவராய்ச் சம்பந்தர் வீற்றிருக்கும் காலத்தில் மேற்குத் திசைத் தலங்களையும் வணங்கத் திருவுள்ளம் கொண்டு விடைபெற்றுத் திருவருட் குறிப்பின் வழியேசென்று திருநெய்த் தானத்தை அடைந்தார்கள். அங்கே இறைவனை மனம் பொருந்த வணங்கினார்கள் "மையாடிய கண்டன்" என்னும் இப்பதிகத்தைப் பாடினார்கள்.

இத்தலமானது திருவையாற்றிற்கு மேற்கே ஒரு மைல்தூரத்தில் உள்ளது. திருவையாற்றிலே சப்தஸ்தான சேத்திரங்களில் ஏழாவது தலம் இது. இங்கே கலைமகள் வழிபட்டுப் பேறுபெற்றாள். இங்குள்ள தீர்த்தம் காவிரி ஆகும். இச்சந்நிதி கிழக்குப் பார்த்திருக்கிறது. இப்போது தில்லைஸ்தானம் என வழங்குகிறது. இறைவனுக்குப் பசுநெய்யால் அபிஷேகிப்பது இங்குள்ள வழக்கமாகும்.

இத்தலத்தில் 51 கல்வெட்டுக்கள் உள்ளன. ராஜாதிராஜன் காலத்தில் ராஜராஜவள நாட்டுப் பைங்காநாட்டுத் திருநெய்த்தானம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

"மையாடிய கண்டன்மலை மகள் பாகமதுடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே"

## 15) திருப்புள்ள மங்கை

வேதங்களிலே கூறப்பட்ட அருங்கருத்துக்களின் உள்ளீடாகிய சிவஞானம் தம் அறிவில் நிரம்பப் பெற்ற சம்பந்தர் திருச்சக்கரப்பள்ளியை வணங்கிக் கொண்டு வயற்கரை வழியாகத் திருப்புள்ள மங்கையை அடைந்தார்கள். அங்கேயுள்ள ஆலந்துறை என்னும் திருக்கோவிலுக்குச் சென்றார்கள். இறைவன் திருவருட்டலத்தை அன்போடு வணங்கிப் "பாலுந்துறு திரளாயின" என்னும் பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

தேவர்கள் அமிர்தங்கடைந்தபோது உண்டான விடத்தை அமுது செய்த இடம் ஆதலின் ஆலந்துறை என இத்திருக்கோவில் வழங்கப்படுகிறது. இத்தலம் பசுபதி கோவில் எனவும் வேளாளப்பசுபதி கோவில் என அடைமொழி சேர்த்தும் வழங்கப்பெறுகிறது. பிரமன் பூசித்த தலம் என்ற சிறப்பும் உண்டு. புள்ளமங்கை என்பதற்கேற்பக் கோபுரத்தில் கழுகுகள் எப்பொழுதும் வசித்துவருகின்றன. "பொந்தின் இதை தேனூறிய" என்னும் அருளார் வாக்கிற்கு இயைபப் பொந்துகளில் எல்லாம் தேனடைகள் காணப்படுகின்றன. திருச்சக்கரப்பள்ளியின் சப்ததலங்களில் இதுவும் ஒன்று.

இங்குள்ள இறைவன் ஆலந்துறைநாதர். இறைவி அல்லியங்கோதை பசுபதிநாதர் எனவும் வழங்குவர். இங்குள்ள தீர்த்தம் காவிரி. இங்கு பதின்மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன.

"பாலுந்திய திரளாயின பரமன் பிரமன்றான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ் புளமங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங்கருதில்
ஆலந்துறை தொழுவார் தமை யடையாவினைதானே"

## 16) திருவிடும்பாவனம்

சிவபெருமான் மிக விரும்பிய தலமாகிய 'திருக்கடிக்குளம்' என்னும் தலத்தை வணங்கிய சம்பந்தர் இடும்பாவனத்தை எய்தினார்கள். அங்கே எழுந்தருளியிருக்கும் சற்குணநாதரை "மனமார்தரு" என்னும் பதிகம்பாடி வணங்கினார்கள் இதில் இடும்பன் தலை நகரமாகிய கொடிமாடக் குன்றவூரையும் சேர்த்துக் குறிப்பிட்டிருத் தலைக்காணலாம்.

இடும்பன் பூசித்துப் பேறுபெற்ற தலமாதலின் இப்பெயர் பெற்றது இத்தலம். இடும்பனது தலைநகரமாகிய குன்றவூரும் அருகாமையில் இருப்பது அறியத்தக்கதாகும். இங்கு வெண்மை நிறமுடைய "வெள்ளை விநாயகர்" விசேஷமாகக் குறிப்பிடப்படுகின்றார்.

அகத்தியமுனிவர் இறைவனின் மணவாளக்கோலத்தைக்காண விரும்பி இறைவனிடம் விண்ணப்பிக்க அவர்திரு இடும்பாவனமாகிய இத்தலத்திலே தமது மணவாளக் கோலத்தைக் காட்டியருளினார். இறைவனது மணவாளக் கோலம் மூலத்தானத்திற்குப் பின்புறம் அமைந்துள்ளது.

இங்குள்ள சுவாமி பெயர் சற்குணநாதர். அம்மைபெயர் மங்களநாயகி இங்குள்ள தீர்த்தம் சமுக புஷ்கரணி இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டு அறியப்படவில்லை.

"மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர் கண்மலர் தூய்த்
தனமார் தருசங்கக்கடல் வங்கத் திரளுந்திச்
சினமார் தரு திறல்வாளெயிற் றரக்கன் மிகுகுன்றில்
இனமாதவ ரிறைவற்கிட மிடும்பாவனமிதுவே"

## 17) திருநின்றியூர்

புள்ளிருக்கும் வேளூரை வணங்கிய புகலிவேந்தர் புகழான் நீண்ட நின்றியூருக்கு எழுந்தருளினார்கள். அங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருவடிகளை ஆராக்காதலோடு வணங்கினார்கள். "சூலம் படை" என்னும் பதிகத்தை அருளிச் செய்தார்கள். அதில் நின்றியூர் நிமலரையல்லாது எனது உள்ளம் வேறொன்றையும் உணராது எனவும், பாதம் பணிவார் அச்சம், பழி, பாவம் இலராவர் எனவும் குறிப்பிடப்படுவது அன்பர் உள்ளத்திற்கும் பெருவிருந்தாகும்.

திருமகள் வழிபட்டு நிலைபேறு எய்திய தலம். சோழன் ஒருவன் திருவிளக்கிட்டுத் தினந்தோறும் வழிபட்டு வந்தான். அவன் கொண்டு வந்ததிரி ஒருநாள் தீர்ந்து விடவே சிவலிங்கத்தினின்றும் ஒரு சோதி தோன்றி அவன் வழிபாட்டிற்கு இடையூறுண்டாகாமல் உதவியது. அதனால் இத்தலம் திரிநின்றவூர் ஆயிற்று இது இப்போது திருநின்றவூர்

என வழங்குகின்றது என்பது செவிவழிச் செய்தியாகும். பரசுராமன் நின்றியூரை இறைவற்கும் பக்கத்திலுள்ள 360 வேலி நிலத்தை வேதியர்கட்கும் அளித்து வழிபட்டான் என்பது புராணவரலாறு. இதனையே சுந்தரர் தேவாரம் தக்கேசி மூன்றாம் பாடல் குறிப்பிடுகிறது. அடுத்த பாடலில் பசு ஒன்று பால் சொரிந்து அபிஷேகித்து வந்ததாகவும் ஒரு வரலாறு குறிக்கிறது.

இங்குள்ள இறைவனின் பெயர் லக்ஷ்மி புரீசுவரர் மகாலட்சுமிநாதர். அம்மையின் பெயர் உலகநாயகி இங்குள்ள தீர்த்தம் நீலதீர்த்தம் (இது அபிதான சிந்தாமணிகூற்று) இதுமகாலக்ஷ்மி தீர்த்தம் எனவும் வழங்கப்படுகிறது. இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டு ஒன்றே கிடைக்கப் பெற்றுள்ளது.

"சூலம் படை சுண்ணப்பொடி சாந்தம் சுடுநீறு
பாலமதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலினொடு போக்கிக் கடிகமழும்
நீலமலர்ப் பொய்கை நின்றி யூரின்னிலையோர்க்கே"

(தொடரும்...

## ஈழத்துச் சிவாலயங்கள் பற்றிய தொகுப்பு நூல்

புராதன பெருமையும், பக்திச் சிறப்பும்மிக்க ஈழத்துச் சிவாலயங்களின் வரலாறுகளைத் தொகுத்து வெளியிடும் பணியினை ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபை மேற்கொண்டுள்ளது. அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்நூல் அமையவுள்ளது.

இந்நூலில் ஈழத்தில் அமைந்துள்ள சிவாலயங்களின் வரலாற்றுப் பெருமைகள், பரிபாலன நடைமுறை, செவிவழிச் செய்திகள், உற்சவச் சிறப்புக்கள், மற்றும் மக்கள் தொடர்பு போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படவுள்ளன. ஆலயம் தொடர்பான வர்ணப்படங்களும் உள்ளடக்கப்படவுள்ளன.

ஈழத்துச் சிவாலயங்கள் தொடர்பான ஆக்கங்கள், ஆதாரங்கள், சான்றுகள் போன்றவை தரவிரும்புவோரிடமிருந்து அவை வரவேற்கப்படுகின்றன. தரவிரும்புவோர் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் பெறவிரும்புவோரும் இம்முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

த. துரைராசா 31A, ஜானகி லேன், பம்பலப்பிட்டி, கொழும்பு-04

தகவல் சி. தியாகராசா (S.T.R) ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபைத் தலைவர்.

உ

# குருவாய் வருவான்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

ஆன்மாவானது மலங்களின் வயப்பட்டுக் கிடக்கிறது. அதனால், இறைவனின் திருவடிகளில் இணையும் பேற்றைப் பெறமுடியாதிருக்கிறது. ஆன்மாவுடன் திருவருளும் சேர்ந்தேயிருந்தும் அதனை அறியமுடியாதிருக்கும் ஆன்மாவிற்கு வீடுபேறு எவ்வாறு கிடைக்கும்? இதனையே திருவருட்பயன்

'இற்றை வரையியைந்து மேதும் பழக்கமில்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை'. என்று கூறியுள்ளது.

ஆன்மா பக்குவமடைந்ததும் திருவருளானதும் குருவாகி வந்து ஆட்கொள்ளும், ஆன்மா அரன்கழலில் இணையும்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதற் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்(டு)
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே

என மெய்கண்டதேவர் சிவஞானபோதத்திலே கூறியுள்ளார்.

ஐந்து புலன்களாகிய வேடரிடையே வளர்ந்து அதனால் அறியாமையில், மயங்கிக்கிடந்தாய், தனக்குள் நின்ற முதல்வனாகிய இறைவனே குருவடிவாய் வந்து ஆன்மா செய்த தவத்தினால் உண்மையை உணர்த்த ஐம்புலன்களை விட்டு நீங்கி, அரனது திருவடிகளிலே ஆன்மாவானது. இரண்டற இணையும் எனக் கூறியுள்ளது சிவஞானபோதம்.

தம்முதல் என்பது தனக்குள் நின்ற அதாவது ஆன்மாவிற்குள் நின்ற திருவருளே குருவாய் வந்து உண்மையை உணர்த்துகிறது என்பதைக் குறிக்கின்றது. இதனையே

'அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ' எனத் திருவருட்பயனும் கூறுகிறது.

ஆன்மா அறியாது அதனுள் நின்று அருள்செய்து வந்த திருவருளே கண்ணாற் காணக்கூடிய குருவாக வந்து நீங்காதுஉடன் நின்று ஆட்கொள்ளும் கோவாகும் என்று கூறுகிறது. இந்தத் திருவருட்பயன்.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்ததனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும், 'என்மகன்நீ' யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமாபோல்
துன்னியஜம் புலவேடர் சுழலிற்பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் உயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரில் நீக்கி,
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

நற்பண்பு ஒன்று மட்டுமே மேன் மக்கள் குணம்.

என்ற சிவஞானசித்தியார் பாடல் சிவஞானபோதம் கூறியதை மேலும் அழகாகக் கூறுகிறது.

அரசகுமாரனொருவன் வேடர்களிடையே இருந்து வளர்ந்து தான் மன்னன் மகனென்பதைப் புரிந்துகொள்ள முடியாது நின்றபோது மன்னன் வந்து “நீ என் மகன்” என்று கூறி வேடரிடமிருந்து பிரித்துப் பெருமை பொருந்தியவனாக்கிப் பேணுவது போல, ஐம்புலன்களாகிய வேடர்களெனும் சுழியுள் அகப்பட்டுத் தனது துணைவனாகிய இறைவனையும் அறியாது துன்பப்படும் ஆன்மாவை அதன் தவப்பயனால் இறைவன் குருவாகி வந்து ஐம்புலன்களாகிய சுழலிலிருந்து நீக்கி, மலங்களை அகற்றித் தானாக்கி மலர்பதங்களில் இணைத்துக் கொள்வான் என்று இப்பாடல் கூறுகிறது. ஐம்பொறிகளும் எமக்கு மெய்ப்பொருளைக் காட்டுவதுமில்லை. மெய்யறிவைத் தருவதுமில்லை. எமது இறைபக்தியும் தவமும் தியானமுமே இறைவனைக் குருவாக வந்து எம்மை ஆட்கொள்ள வைக்கவல்லன.

ஞானேந் திரியங்கள் நன்றாய் உரைக்கக்கேள்
ஊன மிகுபூதம் உற்றிடமாய் - ஈனமாம்ச்
சத்தாதி யைஅறியும் தானம் செவித்தோல்கண்
அத்தாலும் மூக்கென் றறி

என உண்மை விளக்கமும் ஐம்பொறிகளும் ஈனமாம் சத்தாதியை அறிவனவேயன்றி மெய்ப்பொருளை அறிய உதவாதவை என்று விளக்குகிறது.

காட்டிடுங் கரணம் ஒன்றும்
இல்லையேற் காணொ ணாதாம்
நாட்டிய இவற்றால் ஞானம்
நணுகவும் ஒண்ணா முன்னம்
ஈட்டிய தவத்தி னாலே
இறையருள் குருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக்
குரைகழல் குறுகு மாறே

என்று சிவப்பிரகாசமும் இதனையே கூறுகிறது.

புலன்களின் வயப்பட்டு மலங்களாற் சூழப்பட்ட ஆன்மாவை இறைவன் குருவாகி வந்து ஆட்கொள்வது பற்றிச் சைவசித்தாந்த நூல்கள் பலவாறு விளக்கியுள்ளன. அவற்றிற் சில பாடல்களையே இங்கு பார்த்தோம். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதும் நிகழ்பவை பற்றியும் இந்நூல்கள் கூறியுள்ளன. இறைவனால் அடியவர்கள் ஆட்கொள்ளப்பட்ட நிகழ்வுகளும் அவை பற்றி அவர்கள் பாடிய பாடல்களும் சைவ சித்தாந்த நூல்கள் கூறும் தத்துவங்களை நினைவூட்டுவனவாய் அமைந்திருப்பதைக் காணலாம்.

இலட்சியங்கள் வாழ்க்கையில் விறுவிறுப்பூட்டுபவை.

உ

# நல்லிசைச் செவ்வேற் சேஎய்

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

முருகப்பெருமானிடத்தில் பெறலரும் பரிசில் பெற்ற அடியவர் பரிசில்பெற விரும்பும் செம்மலுள்ளம் படைத்த அடியவரிடத்தில் முற்றுணர்ந்த முருகவேளினுடைய முழுமையினை மேலும் மொழியத் தொடங்குவார்.

**சூர்முதல் தடிந்த வேல்:-**

செவ்வேள் பெருமானுடைய திருக்கரத்தில் வேல் விளங்குகின்றது. வேலினுடைய பராக்கிரமத்தை என்னென்பது! அது பிரகாசிக்கின்ற இலைத்தொழிலையுடைய நெடியவேல்.

பாராகிய பூமியைக் குளிர்ந்த கடல் சூழ்ந்துள்ளது. அவ்வைவேல் கடல் குலையும்படி உள்ளே சென்றது. சூரபன்மாவாகிய மன்னனைக் கொன்றது.

"சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடுவேல். (திரு - 46)

**பேய்மகள்:-**

பேய்மகள் கண்டார்க்கு அச்சம் விளைப்பவள். அவள் கொல்களத்தில் விளங்குகின்றாள். அவள் காய்ந்த மயிரினைக் கொண்டவள். வரிசை இல்லாத பற்கள் உடையவள். பெரிய வாயினள். பசிய கண்ணிணையினள். கோபத்தாற் சுழலும் விழியினள். கொடுமை செய்த பார்வையினைக் கொண்டவள். பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடு கடிய பாம்பு தூங்குவதனால் பெரிய மார்பை வருந்துகின்ற காதினள். கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப் பெருமுலை அலைக்கும் காதின் சருச்சரையையுடைய பெரிய வயிற்றினள். நோக்கினரை நடுங்க வைக்கும் நடையினள்.

அவளுக்கு உதிரத்தை அனைந்த கூரிய உகிரினையுடைய கொடுவிரல்கள். கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடை நாற்றத்தையுடைய தலையை ஒள்ளிய தொடியினையுடைய கையிலே எடுப்பாள். அவுணர்க்கு அச்சம்தோன்ற வஞ்சியாது எதிர்நிற்பாள். கொல்கின்ற வெற்றிக்களத்தைப் பாடுவாள். தோளை அசைத்து நிணத்தை உண்ணும் வாயினள். துணங்கை என்னும் கூத்து ஆடாநிற்பாள்.

"கணதொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க" (திரு 53/56)

அன்பு இதயம் என்றும் இளமையானது.

**துணங்கை:-**

"முடக்கிய விருகை பழுப்புடை யொற்றத்
துடக்கிய நடையது துணங்கை யாகும்."

**இரு உரு ஒரு யாக்கை:-**

மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்.

"இருபே ருருவி னொருபே ரியாக்கை.(57)

இருபேர் உரு என்பது சூரன் என்றும் பதுமன் என்றும் இரண்டு பெயரையுடைய வடிவம் என்பாரும் உளர்.

"இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய உடலென்றது, குதிரை முகமும் மக்களுடலுங் கொண்ட சூரபன்மாவின் உடலத்தை. "ஈரணிக்கேற்ற வொடியாப் படிவத்துச்சூர் (கலி 93 - 25 - 6) என்பதற்குக் கெடாத விரதத்தாலே முகம் குதிரை முகமும் உடல் மக்களுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மா" எனறெழுதிய நச்சினார்க் கினியர் உரையும், "சூரொடும் பொர வஞ்சி சூடியபிள்ளை யார்படை தொட்டநாள், ஈருடம்பு மிசைந்திரண்டுதி ரப்பரப்பு மிறைந்தனம் (தக்க 231) என்பதனுரையில் அதனுரையாசிரியர் எழுதிய, 'சூரபன்மாவான அசுர சேனாபதிபட்டு விழ அவனுடைய குதிரையும் அசுரனுமான இரண்டு வடிவும்' என்ற பகுதியும் இங்கே கருதத்தக்கன. (உரைக்குறிப்பு - உ. வே. சாமிநாதையர்)

**சிந்தனைக்கு ஒன்று:-**

முருகப்பெருமானுடைய அவதாரம் பலவாகப் பேசப்படும். சூரபன்மாவினுடைய வடிவம் பல்வேறு வகையாகக் காணப்படும். ஒன்றற்கு ஒன்று மாறுபடுவதால் மனத்தில் மலைவு ஏற்படுவது இயல்பு. இங்கு கச்சியப்பர் காட்டும் கருத்தைச் சிந்தைக்கு விருந்தாகக் கொள்ளின் மலைவுற்ற மனம் அலைபாயாது நிலை கொள்ளும்.

"குற்றமில்லாத பிரமகற்பங்கள் எண்ணில்லாதன ஏகின. ஆதலால் முருகப்பெருமானுடைய காதையும் பல வேறுபாடுகள் பொருந்தியிருக்கும்.

"ஏதி லாக்கற்ப மெண்ணில சென்றன
ஆத லாலிக் கதையு மனந்தமாம்
பேத மாகும்.,, (அவையடக் - 15)

**செ - வேல்:-**

செவ்வேல் - செய்யவேல். முருகப்பெருமான் விடுத்த தாவடி நெடுவேல் வல்விரைந்து ஏகியது. ஆறு வேறுபட்ட கூற்றால் அச்சம் தோன்றச் சென்றது. சூரபன்மா நீங்கலாக அவுணருடைய நல்வெற்றியை நாசம் செய்தது.

கீழ் நோக்கிய பூங்கொத்துக்களையுடைய மாமுதல் தடிந்தது. அது வீரவேல், தாரைவேல். விண்ணோர் சிறை மீட்ட தீரவேல், செவ்வேள் திருக்கைவேல்,

வாரிகுளித்தவேல். கொற்றவேல், சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல், அவுணர்கள் எல்லோரும் தம்முடனே எதிர்ந்தார் குறைந்து தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்த தொருமா தடிந்தது செவ்வேல்.

சேஎய்:-

செவ்வேட் பெருமான் குற்றமில்லாத வெற்றியினையுடையார். ஒருவராலும் அளந்து அறியஒண்ணாத நல்ல புகழ் உடையவர்.

"அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்" (திருமுரு 58 /61)

செவ்வேல் சேஎய் புகழ்சில:-

"எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே" -(திருமுறை -10)

"சமர சூரபன்மாவைத் தடிந்த வேற்குமரன் (திருமுறை 5) "அறுவருந்தம் முலைசுரந் தகடிறாந்தூ றமுதூட்ட, வாருருவத்தெயின்மூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த, வீருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய் (தொல்செய் 152 மேற்கோள்.)

"மாக்கடன் முன்னி, அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக் கருஞ்சின விறல்வேற் (பதிற் 11.)
"நீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச்
சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய் - (பரி -9)
"உரவுநீர் மாகொன்ற வெள்வேலான் - (கலி 27)
"பாரிரும் பெளவத்தி னுட்புக்குப் பண்டொருநாட்
சூர்மாத் தடிந்த சுடரிலைய வெள்வேலே - (சிலப்)
"கருங்கடலுண் மாத்தடிந்தான். (பு. வெ. 103)
"ஒருதோகை மிசையேறி யுழல்சூரு மலைமார்பு முடனூடுறப்
யொருதோகை சுரராச புரமேற விடுகாளை புகழ்பாடுவாம் (தக்க 6)
"கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே (கந்தரனுபூதி)
"குன்றின், நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் (குறுங்கட வாழ்த்து)

ஒவ்வோர் இன்பத்துக்கும் ஒரு துன்பம் உண்டு.

"மணிமயில் உயரிய மாறு வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோன் (புறம் 56)
"இளங்குமரன் றன்னைப் பெற்றிமையவர்தம் பகையெறி வித்திறைவனூரே
- (திருமுறை 2)
"சேந்தனைமுன் பயந்துலகில் தேவர்கள்தம் பகை கெடுத்தோன் திகழுமூரே
(இதுவும்)
"அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள் காண் - (திருப்புகழ்)

பதினெண் சித்தர்களும் அவர்கள் முக்தி பெற்ற தலங்களும் வருமாறு

1. அகஸ்தியர் - அனந்தசயனம் (திருவனந்தபுரம்)
2. கருவூரார் - திருக்காளத்தி ( தஞ்சாவூர் அல்ல)
3. பாம்பாட்டியார் - திருஞாலம்
4. புலஸ்தியர் - பாபநாசம்
5. அழுகண்ணர் - நாகப்பட்டினம்
6. காசிபர் - ருத்திரகிரி
7. கமலமுனி - மதுரை
8. இடைக்காடர் - திருவருணை (திருவண்ணாமலை)
9. நந்தீசர் - திருவாவடுதுறை
10. தன்வந்த்ரி - வைத்தீஸ்வரன் கோயில்
11. கொங்கணர் - திருப்பதி
12. மச்சமுனி - திருப்பரங்குன்றம்
13. அகப்பேய் சித்தர் - எட்டுக்குடி
14. கடுவெளியார் - காஞ்சிபுரம்
15. போகர் - பழனி
16. கும்பமுனி - கும்பகோணம்
17. கைலாயக்கம்பிளிச் சட்டைமுனி - சீர்காழி
18. திருமூலர் - சிதம்பரம்

*-வே. இராமசாமி-*

கடலில் ஓரிருமுறை மூழ்கியபின் முத்தெடுக்க முடியவில்லை என்பதால் கடலைக் குறை சொல்லாதே. நீதான் கடலில் இன்னும் ஆழ முழுகவில்லை. இறைவனை இப்படி ஆழந்து தியானி. -யோகானந்த சுவாமிகள்.

நல்லதைச் செய்தால் நல்லதைப் பெறலாம்.

உ

(தொடர்ச்சி..

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# சொர்க்காரோகணம்

சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்கள்

இமயமலைச்சாரலை அடைந்த பாண்டவர்கள், மேருகிரியில் ஏறி நடக்கத் தொடங்கினர். மேருமலையில் நடந்து சிறிது தூரம் சென்றதும் திரௌபதி களைப்படைந்து, நடைதளர்ந்து நாவரட்சி யேற்பட்டு வானத்தினின்றும் வீழுகின்ற நட்சத்திரம் போன்று ஒளிவடிவாய் உயிர் நீத்தாள். மாமேருமலையில் அவளது பொன்னுடல் வீழ்ந்தது. திரௌபதியின் ஆருயிர் பிரிந்தமையைக் கண்ணுற்ற பீமன், இவை ஒன்றையும் கருத்திற்கொள் ளாது முன்னே நடந்து கொண்டிருந்த தருமரை நோக்கி "அண்ணலே பாவ மேதும் செய்யாத இவள் இப்படி இடை யில் வீழ்ந்தது ஏன்?" என வினாவ லானான். அப்பொழுது தருமர் "சகோதரா! திரௌபதி நம் ஐவருக்கும் மனைவியாக இருந்திருக்கிறாள். எனினும் இவள் அர்ச்சுனன் மீது அதிகபிரியம் வைத்திருந் தாள். அதன்பயனை அனுபவிக்கிறாள். எனவே, நீவிர் எல்லோரும் எதனையும் பொருட்படுத்தாது விரைந்து வாருங்கள்" என்றார். தருமநந்தனின் உரைகளைச் செவிமடுத்த அனைவரும் மனத்தைத் திடப்படுத்தியவர்களாய் யுதிஷ்டிரரைப் பின் தொடர்ந்தனர். மேலும் சிறிது தூரம் சென்றதும், சகாதேவன் நடைதளர்ந்து தடுமாறி முகம்மாறிப் பிராணவாயு தளர்ந்து அவனது சரீரம் மேருகிரியில் வீழ்ந்தது. சகாதேவனின் முடிவுநிலை யைக் கவனித்த பீமசேனன் தருமரை நோக்கி, "அரசே சகாதேவன் இவ்விதம் வீழ்ந்து போனானே. யாது காரணம் என வினாவினான். அப்பொழுது தருமர், "இளவலே இவன் தன்னை விஞ்சிய பண்டிதன் எவனுமில்லை என்ற கருத்தை மனத்தில் வைத்திருந்தான். சிறந்த அறிவாளியாகிய இவனுக்குத் தன்னை விடமேலானவர்கள் இல்லை என்ற நினைப்பால் ஆணவம் சிறிது இருந்தது. அதன் விளைவே இது" என எடுத்துரைத் தார். இன்னும் சிறிது தொலைவு நடந்ததும் நகுலன் உடல்சோர்ந்து கீழே வீழ்ந்தான். நகுலன் வீழ்ந்து இறந்த மையைக் கண்ட பீமன் "நகுலனின் வீழ்ச் சியின் காரணம் யாது?" என்று தருமரை வினாவினான். பீமனின் வினாவிற்குத் தன்னை விஞ்சிய அழகன் ஒருவருமில்லை என்ற கர்வம் நகுலனின் உள்ளத்தில் இருந்தது. இதுவே அவனின் வீழ்ச்சிக்குக்காரணம் என்று தருமர் பதிலுரைத்தவண்ணம் மேலே நடந்து சென்றார். பீமனும் அர்ச்சுனனும் யுதிஷ்டி ரரைப் பின்தொடர்ந்து சென்று கொண்

டிருந்தனர். இவ்வாறு சென்று கொண் டிருந்த வேளையில் அர்ச்சுனன் உடல் வியர்த்துப் பலம் குறைந்து வேகம் தடைப்பட்டுக் கீழே வீழ்ந்தான். அவனது ஆன்மா வெளியேறி விண்ணிற் கலந்தது. அர்ச்சுனன் வீழ்ந்தமையைக் கண்ட பீமன் கவலையடைந்தவனாய்த் தருமரை நோக்கி "அண்ணலே தேவேந்திரன் புதல் வனாகிய காண்டீபன் வீழ்ந்து விட்டான்." என்று கூறலானான். பீமனின் உரை களைச் செவிமடுத்த தருமர் "வில்லாண் மையில் தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்ற எண்ணத்தினால் மற்றை வில்லாளர்களை அர்ச்சுனன் அவமதித் துள்ளான் இதுவே அர்ச்சுனனின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது" என்று கூறலானார். இப்பொழுது பீமசேனனும் நாயும் மட்டும் யுதிஷ் டிரரைப் பின் தொடர்ந்தனர். மேலும் சிறிது தூரம் சென்றதும் பீமசேனன் தன் உடற்பலம் குன்றி களைப்பு ஏற்பட்டு, கால்கள் சோர்ந்து போவதனை உணர்ந்து தானும் தன் உடலைவிடும் தருணம் வந்துவிட்டது என்றுணர்ந்த வனாய் "அண்ணலே நானும் தங்களை விட்டுப் பிரியும் நேரம் வந்துவிட்டதே. ஏன் எனக்கு இந்நிலை ஏற்பட்டது? என வினாவினான். அப்பொழுது தருமர் தன் சகோதரனை நோக்கி மனத்திலே எவ்வித சலனமுமற்றவராய் ''பீமசேனா! நீ அதிகளவில் உணவு உண்டு உன்தேகம் பலம் பொருந்தியதாய் விளங்கியது. உனது தேகபலத்தின் வலிமையால் நீ எவரையும் மதிப்பதில்லை. எல்லோருட னும் அன்பாக இருப்பதில்லை. மற்றவர் மனம் களிக்கும் வண்ணம் இன்சொற் களைப் பேசுவதில்லை. அதிக உணவின் பயனாய் அளவுக்கதிகமாகத் தூக்கத்தில் இருப்பாய் இவைகளே நீ இடையில் விழக்காரணம்" என்று கூறிய உரை களைச் செவி மடுத்த பீமசேனன் தருமபுத் திரரை வணங்கிவிட்டு நிலத்தில் வீழ்ந் தான். பீமனும் வீழ்ந்து விட்டான் என்பதனை உணர்ந்து கொண்ட தருமர் மேருகிரியின் மேற்புறம் அடைந்தார். நாயும் அவரைத் தொடர்ந்து சென்றது.

## தேவேந்திரன் காட்சி தருதல்

தருமர் எல்லோரையும் இழந்து தனியொருவராய் மேருகிரியை அடைந்த வேளை (சுவானம்) என்ற நாய் மட்டும் அவருடன் சென்று கொண்டிருந்தது. அவ்வேளையில் அமராவதியின் அதிபதி யாகிய தேவேந்திரன் தேவர்கள், முனிவர் கள் புடைசூழ அவ்விடத்திற் காட்சி தந்தான். தேவேந்திரன் தன் முன் பிரசன்னமாகி இருப்பதனைக் கண்டு கொண்ட தருமர் வியப்படைந்தவராய் "என்ன புண்ணியம் செய்தேன்! தேவேந் திரன் என்முன் தோன்றியுள்ளாரே" என்று சிந்தித்து ஆனந்தமடைந்து அவனை நமஸ்கரித்து வாழ்த்தி அடிபணிந்து நின்றார். அவ்வேளை இந்திரன் தருமரை நோக்கி "தருமசீலனாகிய நீ இத்தேரில் ஏறி என்னுடன் சொர்க்கத்துக்கு வரலாம்" என்று பணித்தான். அப்பொழுது தருமர்

சுறுசுறுப்பு அதிஸ்டத்தின் தாய் போன்றது.

இந்திரனைப் பணிந்து "தேவரீர் எனக்கு இப்பேறு அருள் புரிந்தமையால் யான் மகிழ்வடைகிறேன். ஆயினும் நான் தேரேறிச் சொர்க்கத்துக்கு வர விரும்ப வில்லை. என் அருமைச் சகோதரர்களும் எனது மனைவியும் இறந்து போனார்கள். யான் தனியே சொர்க்கத்திற்கு வந்து என்ன இன்பத்தை அனுபவிக்கப் போகிறேன்" என்று உரைத்துத்தேரில் ஏறிச் சொர்க்கத்தை அடைய மறுத் துரைத்து நின்றார். தருமநந்தனின் உரை களைச் செவிமடுத்த இந்திரன் தருமரை நோக்கி, "தருமபூபதியே உனது சகோ தரர்களும் உனது மனைவியும் மகிழ் வுடன் சொர்க்கத்தில் வீற்றிருக்கின்றனர். எனவே நீ கவலைப்படாமல் இந்திர விமானத்தில் ஏறிச் சொர்க்கத்தை அடையலாம்" என்று உரைக்கவும் மனம் மகிழ்ந்த யுதிஷ்டிரர் இந்திரனை நோக்கி "தேவேந்திரா, நாம் அஸ்தினாபுரியை விட்டு நீங்கியதில் இருந்து என்னைப் பின் தொடர்ந்து வரும் நாய் ஒன்று உள்ளது. எல்லோரும் என்னை விட்டு நீங்கிய வேளையிலும் இந்நாயானது என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக் கிறது. எனவே, கருணை கூர்ந்து தேவரீர் இந்நாயையும் என்னுடன் ஏற்றிச் செல்ல வேண்டும். எனக்குக் கிடைக்கும் மேலான கதி இந்நாய்க்கும் கிட்ட அருள் புரிய வேண்டும்." என்று வேண்டலானார்.

தருமநந்தனின் விசித்திரமான வேண்டுகோளைச் செவியுற்ற இந்திரன் புன்னகைபுரிந்தவாறு "தருமநந்தனே உமது வேண்டுகோள் விசித்திரமானது. நற்புண்ணியப் பலன்களைத் தரவல்ல சற்காரியங்கள் பலவற்றை நிறைவாகச் செய்தும், பற்பல யாகங்கள் வேள்விகள் செய்தும் கிட்டமுடியாத சொர்க்க லோகப் பேற்றினை எளிதானதென எண்ணிவிட்டீர் போலத் தோன்றுகிறது. மிகவும் கடை நிலையில் உள்ளதான இந்த நாய் எவ் வளவு இழிந்தது என்பது உமக்குத் தெரியாத விடயம் அன்று நாயின் சுவாசக் காற்று, நாயின் நிழல், இது உதறிய தூசி, இது உறங்கிய இடத்தின் தொடுகை, இதன் எச்சில் எல்லாம் கேடுதரக்கூடியவை என்பதனால் ஆசார அனுஷ்டானங்களிற் பிடிமானம் உள் ளோர் அதனை விரும்புவதுமில்லை. அதனை அடுப்பதும் இல்லை இப்படியான பிராணியைத் தேவேந்திர விமானத்தில் ஏற்றிச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும்படி கேட்பது மிகவும் விந்தை யானது நாயின் இழிநிலையை உணர்ந்த நீர் இனி இந்நாயைத் துரத்திவிட்டு விமானத்தில் ஏறிக்கொள்ளும்" என்றான் இந்திரன்.

இந்திரன் உரைத்தவற்றைச் செவிமடுத்த தருமராஜனின் சிந்தையிற் கவலை தோன்றியது. இந்திரனைப் பணிந்து மீண்டும் "சுவாமி உலகம் யாவற் றிலும் சொர்க்கம் பெரியது. சொர்க்கத் திலும் பெரியர் தேவர்கள். தேவர்களில் தாங்கள் பெரியவர். தங்களிலும் பெரியவர் பிரம்மா. பிரம்மாவிலும் பெரியவர் பரந் தாமன். கிருஷ்ணபரமாத்மாவை மைத்துன னாகப் பெற்ற பெரும்பேறு பெற்றவன் யான். தேவேந்திரனாகிய தாங்கள் எதிர்கொண்டழைத்துத் தரிசனமும் தந்த மிகவும் பெரும் பேறும் பெற்றுவிட்டேன். இப்பெரும் பேறுகளைப் பெற்றுயர்ந்த நான் என்னை நம்பி வந்த இச்சிறிய ஜீவனைக்

எதையும் தேடாமல் கண்டு பிடிக்க முடியாது.

கைவிட்டுப் பாவத்தை தேடிக்கொள்வதா? எளிய பிறவி எடுத்திருப்பினும் மனிதர் களாற் செய்யமுடியாத் செயலை இந் நாய் செய்துள்ளது. மனிதர்கள் கூட நடந்து வரமுடியாத இத்தொலை தூரத்தை என்னுடன் சேர்த்து நடந்து வந்து, மகாமேருமலையை அடைந் துள்ளது. பூமியில் வாழும் எத்தனையோ கோடானுகோடி ஜீவர்களில் இந்த நாயானது தனித்துவமுடையது போன்று இவ்வாறு செயறபட்டுள்ளது.

(தொடரும்...

## மலர்களால் வழிபாடு- ஆரம்பம்

மலர்களானவை இறைவழிபாட்டு நடைமுறைகளில் எப்போது முக்கியத்துவம் கொடுத்துச் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்பதற்கான தகுந்த எழுத்து வடிவிலான சான்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியாதநிலையில், இலக்கியச்சான்றுகளே இதனை ஓரளவுக்குத் தெரியத் தருகின்றன எனில் மிகையாகாது.

தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்க காலமாகலாம் எனப் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும் சங்ககாலச் சூழ்நிலையில் எதிரியுடனான போரின்போது வீரமரணம் அடைந்தவீரனின் நினைவாக ஒரு அடையாளக்கல் நாட்டப்படும். அதுவே 'நடுகல்' எனப்பட்டது. அந்நடுகல்லில் அவ்வீரனதுபெயர் போரிற் புரிந்த வீரச்செயல்கள் என்பன பொறிக்கப்படுகின்ற பெருவழக்கிருந்ததாக அக்காலத்தில் எழுந்த பாடல்கள் சிலவற்றிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகின்றது. இவ்வாறு நாட்டப்பட்ட நடுகல்லினை (வேண்டியவர்கள்) அதிகாலையில் நீராட்டி, வாசனைப்புகைகாட்டி, நெய்விளக்கு ஏற்றுவார்கள். கரந்தைப்பூவையும், பனையோலையால் தொடுக்கப்பட்ட வேங்கைப்பூவையும் சூட்டி மகிழ்வார்கள். (அத்துடன்) நெய்யோடு பூவைக் கலந்து தூவி வாழ்த்துவர்.

இவற்றினை நோக்கும்போது இந்துசமய உருவவழிபாட்டு முறையின் ஆரம்ப நிலையினைக் காணக் கூடியதாய் இருக்கின்றது.

"கல்வெட்டுக்களிற் காணப்படும்
இந்துசமயச் செய்திகள்"
கட்டுரை - இந்துதர்மம். 2000 (பக். 54`

இச்செய்திகளிலிருந்தும் போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வீரர்களுக்காக நாட்டப்பட்ட நடுகற்களுக்கு நீராட்டியும், புகையிட்டும், பூவைத்தும், பூச்சொரிந்தும் வாழ்த்திக் கௌரவித்த நடைமுறையே காலகதியில் தம் பயத்தின் காரணமாகவோ அன்றி நன்றியுணர்வின் காரணமாகவோ வணக்கத்திற்குரியதாகக் கருதிய மேலான சக்தி ஒன்றுக்கு உருவம் அமைத்துத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க ஆரம்பித்திருக்கலாம் என ஊகித்துக் கொள்ள முடிகின்றது.

-ஆ. கதிரமலைநாதன்-

உ

# திருக்குறளில் அதிகார முறை வைப்பு

இரா செல்வவடிவேல் அவர்கள்

"கற்க கசடு அறக்கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக" - குறள் 391

உயிர்த் தொகுதி பரிணாம வளர்ச்சியில் புல், புழு, விலங்கு... என்று வளர்ந்து கடைசியாக ஆறறிவுடைய மனிதன் பரிணமித்தான். மனிதன், மிருகமும் அல்லன், முழுமனிதனும் அல்லன். மனிதன் மிருகத் தன்மையிலிருந்து விலகி மனிதனாக வாழ்ந்து தெய்வநிலை எய்த வேண்டும் என்பது தான் சான்றோன் அறிவுரையாகும். இன்றுமனிதனின் நிலை என்ன?

இன்றைய மனிதன் அவசர உலகில் வாழ்கின்றான். உண்மை இன்பம் எது? என்று தெரியாது அலைகின்றான். இதற்கு யாது காரணம்? எனச் சிந்திப்பின் நல்ல கல்வியறிவு இன்மையே என்பது வெளிப்படை.

தமிழ் இலக்கியங்கள் தமிழ் மொழிக்கும் தமிழர் நாகரிகம், பண்பாட்டிற்கும் மகுடமாகத் திகழ்பவையாகும். இற்றைக்கு 2040 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள். தமிழ் இலக்கிய மகுடத்திற் பதிக்கப்பட்ட முத்தாகும். 1330 குறட்பாக்களும் மனிதனை, மனிதனாக வாழ, வழிகாட்டி நிற்கும் அருட்பாட்களாகும்.

திருக்குறளுக்குப் பல சிறப்புகள் உண்டு. அதிகாரமுறை வைப்பு அவற்றில் ஒன்றாகும். இதனைக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். மனித வாழ்விற்குத் தேவையானவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் கோவையாகப் பாமரரும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் ஒழுங்குபடுத்தியிருப்பது தனிச் சிறப்பாகும். "நல்ல கல்வியறிவு" எனும் ஒரு விடயத்தை மையமாக வைத்து நோக்கின் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றம் கடிதல், பெரியாரைத் துணைக்கோடல்......... (அதிகாரம் 40 தொடக்கம் 45 வரை) எனத் தொடர்கிறது.

நாம் கற்கும் கல்விஞானத்தை அறிவைத் தருவதாக அமையவேண்டும். கற்கவேண்டிய நூல்கள் எவை? அவற்றைக் கற்கும் முறை யாது? என்பதை முதலின் அறிந்து கொள்வது அவசியமாகும். மனக்கசடு அறுப்பவற்றை முதலில் கற்கவேண்டும். அவற்றை பொருள் உணர்ந்து கற்கவேண்டும். ஆழ்ந்து கற்றபின் அக்கல்விக்கு ஏற்பவாழவேண்டும். ஒழுக்கத்தை உணர்த்தும் கல்வியே இன்றைய தேவையாகும். மனதில் எழக்கூடிய தீய குணங்களை அறவே களையக்கூடிய நூல்கள் தாம் இன்றைய தேவையாகும். ஒழுக்கம் உயிரினும் மேலானது என்பதை உணர்த்தும் அறிவு ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால் அவன், மனிதனாகி விடுவான். பின்னர் தாம் கற்ற கல்வியை உலகத்தவர்க்கு உணர்த்தித் தாம்

இன்புறுவர். உலகு இன்புறக் கண்டு. கல்லாத ஒருவன் பசி, காமம் எனும் இரண்டின் வயப்பட்டு இவ்விரண்டையும் பெறுவது தான் உலகின்பம் என்ற தவறான சிந்தனைக்கு உட்பட்டுத் தீய ஒழுக்கத்திற் புகும் அவல நிலைக்கு உட்படுகிறான். கற்றவன் பசியும், காமமும் நாகரிகமான முறையில் பெறப்படவேண்டும் எனும் ஞானத்தைப் பெற்றவனாகி மனிதனாகி விடுகிறான் அல்லவா!

ஒருவர் தான் பெற்ற கல்வி ஞானத்தை மற்றயவர்க்குப் பொருள் விளங்குமாறு சொல்லுதல் வேண்டும். கற்றோர் கூறுவதை மற்றோர் கேட்கும் செவிச் செல்வமே சிறந்த செல்வமாகும். மனிதர்களுக்கு உணவை உண்ணும் நாச்சுவை அறிவைத் தரும் செவிச்சுவை ஆகிய இரண்டும் வேண்டியனவாகும். ஆனால், நாச்சுவையன்றிச் செவிச் சுவையே அறியாத மக்கள் செத்தால் என்ன? வாழ்ந்தால் என்ன?

எத்தகைய பொருள் பற்றி யார் யார் எடுத்துக் கூறினும் கூறுபவர் பற்றிய ஆய்வை விடுத்து. அவர் கூறியவற்றில் எது உண்மைப்பொருள் என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிவதே அறிவின் பண்பும் செயலுமாகும். உண்மையறிவு பழிபாவங் களுக்கு அஞ்சும் தன்மையும், அல்லன வற்றை அஞ்சாது எதிர்க்கும் துணிவை யும் தரும்.

கல்விஞானம் உடையார் உலகில் மதிக்கப்படும் மனிதர்களாகத் திகழ்ந்து இறப்பின் பின்னும் மக்கள் மனத்தில் வாழும் உயர்நிலையடைவது கண்கூடு. இத்தகையவர்கள் கர்வம், கோபம், இழிந்தகுணம், சின்னப்புத்தி ஆகிய மனக்குற்றங்கள் வராமல் தடுத்துக் கொண்டவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு வரும் முதலில் தன்குற்றம் அறிந்து, அதனைப்போக்கிக் கொள்ளும் அறிவைப் பெறவேண்டும். தன்னிற் குற்றம் கொண்டு, அதை மறந்து பிறரிற் குற்றம் காண முயல்வது அறியாமை வயப்பட்டதாகும்.

சான்றோர்கள் உலகிற்கு வாழும் வகை காட்டியவர்கள். வள்ளுவர் குறளும் கண்ணன் கீதையும் உலகெல்லாம் பரவி யுள்ளன. எதற்குப் பிரச்சாரம் அதிகமோ அதையே மக்கள் பின்பற்றுவர் பெரும் பாலானோர் இன்று சினிமாக் கலாசாரத் தின் வழிப்பட்டு நிற்பதைக் காண்கிறோம். கல்வியின் மூலம் உலகிற்கு உண்மை யான வழிகாட்டியது தமிழ்நாடுதான். ஆனால் தமிழ்ச் சான்றோரின் அருட் செல்வம் எல்லாம் குடத்துள் விளக்குப் போல் குறுகிய வட்டத்துக்குள் முடங்கிக் கிடக்கக் காண்கிறோம். நமது அருட்செல் வங்கள் குன்றின் மேல் விளக்காக ஒளிர வேண்டும். சான்றோர்களாகிய மாணிக்க வாசகரின் திருவாசகத்தேன் மேற்குலக மாந்தர் உள்ளத்தையும் கவர்ந்தது, அப்பர் தேவாரம் "என்கடன் பணி செய்து கிடப்பதே என்று உலகிற்கு உணர்த் தியது. சம்பந்தர் வாக்கு அருள்வழி காட்டியது. சுந்தரர் தமிழ் அன்பு மணம் பரப்பியது. சேக்கிழார் புராணம் வாழ்வைச் செம்மைப்படுத்த உதவியது. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல், இறை யருளாடலைக் காட்டியது. பிற் காலத்த வராகிய பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் அனைவரும் சன்மார்க்கத்தைக் காட்டினர். அருணகிரியார் திருப்புகழ்

திருப்தி என்பது மனமகிழ்ச்சியே.

தமிழின் இனிமைக்கு இனிமை சேர்த்தது மட்டும் அன்றித் தம் குற்றம்கண்டு, அது நீக்கி மக்களுக்குப் புதுப்பாதை காட்டினார். பெரியாரைத் துணைக் கொண்டு, அவர்தம் சொற்களைச் செவி மடுப்பதன் மூலம் மனிதனாக வாழலாம் என வழிகாட்டி நிற்கும் திருக்குறள், தமிழ் இலக்கிய மகுடத்தின் முத்தல்லவா!

"கற்றதனால் ஆயபயன் என்கொல்? வால் அறிவன்
நல்தாள் தொழா அர் எனின்," - குறள் 2

## அழிவில்லை

உடைந்து போன ஒரு மண்பானையின் கழுத்து பூமியில் கிடந்தது. வழிப்போக்கன் ஒருவன் அதைக் கவனிக்காமல் மிதிக்கப் போனான். "மிதிக்காதே, மிதிக்காதே நான் ஒரு பானையின் கழுத்து என்று" சத்தம் போட்டது அது. வழிப்போக்கன் சிரித்தான்.

"இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மிதித்தாலென்ன? உடைத்தாலென்ன? நீ இப்பொழுது பானையல்ல. உடைந்து போன அதன் கழுத்து" கழுத்து இதைக் கேட்டுச் சிரித்தது.

"முன்பு நான் பானை, இப்பொழுது கழுத்து, நாளை மீண்டும் களிமண், பிறகு ஒரு புதிய பானை! ஆனால் நீ....? வழிப்போக்கன் யோசித்தான். அதைத் தொட்டுக் கும்பிட்டுத் தன் வழியே போனான்.

## தத்துவமுத்துக்கள்

கண்கள் மங்களகரமான பொருள்களைக் காணட்டும் செவிகள் புனிதமான ஒலிகளைக் கேட்கட்டும்! இறைவனைச் சிந்தித்திருப்பதில் காலம் கழியட்டும்.

சைதன்யம் ஓர் குகை. அதனுள் பிரவேசித்தவர்கள் மறுபடியும் திரும்புவதில்லை. தாங்களும் குகையாகவே மாறிவிடுவர்-விடுகின்றனர்.

ராதாகிருஷ்ண ப்ரேம பக்தியை பேரன்புடன் பின்பற்றுங்கள், கடவுளை அடைய இது ஒன்றே வழி. அவனை அடைந்தாக வேண்டும் என்ற அருள்தாகம் பிடித்தவனாக சாதகன் ஆகிவிடல் வேண்டும்.

உனக்கு உதவுவதன் மூலம் உலகிற்கே நீ உதவுகிறாய். நீ உலகத்தில் இருக்கிறாய். நீயே உலகமாக இருக்கிறாய். நீ உலகிலிருந்து தனிப்பட்டவன் அல்ல. உலகம் உன்னிலிருந்து தனிப்பட்டதல்ல.

உன் கண்களை மூடிக்கொள். இதழ்கள், செவிகள் இவற்றையும் மூடிக்கொள். இப்போது இறைவனின் ரகசியத்தை உன்னால் அறியமுடியவில்லையானால் என்னைப் பார்த்துச் சிரி.

முன் எச்சரிக்கை என்பது அறிவின் மூத்த குழந்தை.

உ

(தொடர்ச்சி..

# யார் இந்த(ச்) செல்லம்மா?

**சச்சிதானந்தா ஆச்சிரமம்**

**ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்**

**மாதாஜி மனத்திரையில் குழந்தை வரையும் ஓவியங்கள்**

அன்பு, ஒழுக்கம், அறம், ஆன் மீகம் என்னும் விதைகளை நாட்டினார். பருவத்தே பயிர் செய் என்பதை. உணர்ந்த ஆசிரியை எந்த நிலத்தில் எந்த விதையை எப்போது நாட்ட வேண்டுமென உணர்ந்து செயற்பட்டதால் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம பாலர்களிடம் ஒரு தனித்துவமும் புனிதமும் காணப் பட்டது இவை பார்ப்போரைப் பெரிதும் கவர தொண்டர்கள் இலவச சீருடை, இலவச மருத்துவ பரிசோதனை, சத் துணவு வழங்கல் போன்றவற்றைச் செய்யமுன் வந்தனர். இத்தகு சேவை கள் பாலர்கட்கு எங்கும் கிடைக்கா தளவிற்கு குறிப்பாக பெற்றதாயிடமே இருந்து கிடைக்காத அளவிற்கு மாதாஜி யின் அருள்ஞானக் குழந்தைகட்குக் கிடைக்கப்பெற்றது. சாவகச்சேரியைச் சேர்ந்த ஸ்ரீ விக்கினேஸ்வரா தொழிலதிபர் திரு. எஸ் செல்வரெத்தினம் பாலர் பாட சாலை பற்றி ஸ்ரீமான் குழந்தை வடிவேலு மூலமாக செவி வழியாகப் பெற்ற சேதியை அறிந்து ஒரு நாள் ஆச்சிர மத்திற்கு நேரில் வந்து பார்த்தார். வந்த தும் மெய்மறந்து ஞானகுரு பீடத்தில் குருகுலபோதனைகள் நடக்கிறது போல் என வியந்தார். திருசெல்வரெத்தினத் திற்கு மாதாஜிபாலர் பாடசாலை பற்றியும் ஸ்ரீமான் குழந்தைவடிவேலுவின் சீரிய பணி பற்றியும் எடுத்துக்கூறினா. உடனே திரு செல்வரெத்தினம் தான் இக்குழந்தை கட்கு தினமும் சத்துணவு வழங்கிறேன் தாயே என்று கூறினார். மாதாஜியின் குருநாதனின் வரலாற்றை அறியவேண்டும். ஆய்வு செய்யவேண்டும் அது நூலாக வெளிக்கொணரப்படவேண்டும் என ஸ்ரீமான் குழந்தை வடிவேலுவின் உள்ளத்தில் அழுந்திக் கொண்டிருந்தது. எடுத்த பணியினை முடிப்பதில் திடசங்கர்ப்பம் உடையவர் ஸ்ரீமான் குழந்தை வடிவேலு குருநாதரின் ஆவணங்களைச் சேர்ப்பதில் யாழ்குடாநாட்டின் நாலாபக்கமும் ஓடினார். தேடினார் தேடியவற்றைக் கொண்டு தொகுப்பதற்கு ஒரு ஆசானைத்தேடினார். தன்னுடைய அன்பர் டாக்டர் சபாநாதனை அணுகி விபரத்தைக் கூறினார். அதற்கு ஏற்ற ஆள் தன்னுடைய மாமனார் வித்து வான் க. காமாட்சி சுந்தரம் என்றும் இவர் கள் நயினைநாகபூசணி அம்பிகையின் அருட்கடாட்சம் பெற்ற வரகவி நாகமணி புலவர்கள் பரம்பரையில் வந்தவர்கள் என் றும், மாதாஜி தீட்சைபெற்ற நயினை முத்துச்சாமியாரின் பரம்பரையினரும் என்று கூற ஸ்ரீமான் குழந்தை வடிவேலு வின் உள்ளம் பூரித்து முகம் ஆனந்தத் தோற்றம் பெற்றது. உடல் நோயால் கைதடியில் தன்மகளோடு வாழ்ந்து வந்த வித்துவான் காமாட்சி சுந்தரம்

சந்தர்ப்ப சூழ்நிலைகள் வாழ்க்கையை மாற்றிவிடும்.

ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் வரலாற்றை சிறந்த முறையில் செந்தமிழ் சொட்ட, தேன் தமிழையும் உவமான, உவமேயம் ததும்ப ஒரு உபநிடதநூல் போல் ஆக்கினார்.

25.7.1993 ஆச்சிரமத்தின் கற்றோர் அவையில் மாதாஜி முன்னிலையில் துர்க்கா அருள் தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நூல் வெளியீடு செய்யப் பட்டது. குருநாதரின் அற்புதமும், மாதாஜி யின் அருளொளிச் சிறப்பும் அன்று அங்கு நிலவியது. அதாவது சுவாமி களின் நூலை எழுதிய ஆசான் அன்று இவ்வுலக வாழ்வை நீத்த பெருமையும் நடந்தது.

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரானாக மாறி னார். அத்துடன் மாதாஜியின் திருப்பாற் கடலில் நீத்தவும் தொடங்கிய செல்வ ரெத்தினம் ஆச்சிரமத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

அன்னையின் அருளாசி பெற்ற வைத்திய கலாநிதிகளான திருவாளர் கணேசலிங்கம், திருவாளர் சபாநாதன் எனும் அடியார்கள் பாலர்கட்கு மருத்துவ சேவை செய்வதற்காய் முன்வந்து சேவை செய்ததுடன் மாதாஜியின் ஞானோபதேசங்களையும் கேட்டு ஒன்றி னர். சிறார்களின் திறமை, சிறார்களை நெறிப்படுத்தும் பாங்கு ஆகியவற்றை உணர்ந்த அவர்தம் பெற்றோர்கள் தங் களையும் ஆச்சிரமத்தில் அடியவர் களாக்கிக் கொண்டார்கள். ஸ்ரீ சச்சி தானந்த ஆச்சிரம பாலர் பாடசாலை ஒரு பல்கலைக்கழகம் போலாகியது.

மாதாஜி மனத்திரையில் ஸ்ரீமான் குழந்தை வரைந்த முதலாவது ஓவியம்.

கலை, பண்பாடு, சமூக சீர்திருத் தங்கள் யாவும் திறமையிருந்தும் மறைக் கப்பட்டு, நெறிப்படுத்த ஆள் இல்லாமல் இருந்த கைதடியில் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் தெப்பமாக அமைந்தது. மாதா ஜியை இயங்குசக்தியாக வைத்து ஸ்ரீமான் குழந்தை வடிவேலு மாலுமியாகி ஸ்ரீ சச்சி தானந்த சுவாமிகள் படகாக அமைத்து தெப்பம் ஓடத்தொடங்கியுள்ளது. படகில் ஏறும் பிரயாணிகட்கு யோகாசன, தியான வகுப்புகள், மிருதங்கப் பயிற்சிகள் குரு குல முறைப்படி போதிக்கப்பட்டது. மன ஒருமைப்பாட்டிற்காய் ஏற்படுத்தப் பட்ட இந்நிகழ்வுகளினால் படகில் ஏறும் பக்தர் கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித் தது. மாதாஜி இவற்றையெல்லாம் பார்த்து புன்முறுவல் செய்து தன் குருநாதரின் வாசகமாகிய "காட்டவேண்டிய இடத்தில் காட்டுகிறேன் பார்" என்பதை மீட்டுப் பேரானந்தம் அடைவார்.

கைதடியே தெரியாதவரை நயினையிலிருந்து அழைப்பித்துதன் சிறப்பை உலகிற்கு உணர்த்தவிட்டு ஆசா னின் கைவண்ணத்தை உலகிற்குக்காட்டி 'காட்டவேண்டிய இடத்தில் காட்டுவேன் பார்' என்ற வாக்கியத்திற்கு விளக்கம் தான் கொடுக்க முடியுமா? குருநாதரின் நூல் வெளியீடு மாதாஜி மனத்திரையில் ஸ்ரீமான் குழந்தை வடிவேலு வரைந்த இரண்டாவது -ஓவியம்.

மாதாஜி மனத்திரையில் வரையும் ஓவியங்களால் திரைப்படம் பார்க்க வரும் மக்கள் கூட்டம் போல் தினமும் அடியார் கள் வருகை பெருகத்தொடங்கியது.

வருந்துவதை விட உறுதி கொள்வது நல்லது.


மாதாஜி அருள்வேண்டி அதனை நயின, ஸ்கரிச, மாசை, திருவடி தீட்சைகளாக வேணும் பெற்றுவிடவேண்டும் அடியார் களிடையே போட்டா போட்டி மட்டு விலைச் சேர்ந்த திரு விநாயகமூர்த்தி குடும்பம் தங்கள் குலதெய்வம் பன்றித் தலைச்சி அம்மன் மாதாஜி தான் என உணர்ந்ததும், மட்டுவிலில் இருக்கும் போது உணரவில்லையே என்ற வேதனையுடன் கைதடி வந்து மாதாஜி யிடம் குடும்பமாக திருவடி தீட்சை பெற்ற காட்சி அனைவரையும் சிந்திக்க வைத்தது. திருவடி தீட்சை பெற்றதோடு நின்று விடாது திரு விநாயகமூர்த்தி மாதாஜியுடன் சிறிது காலம் வாழ்ந்து ஞானோபதேசங்களைக் கேட்டதுடன் சுவாமி சச்சிதானந்தருக்கும் பூசைகளும் இயற்றினார். பாபீர் அவர் நாமம் வீடே பெரு.. என்றபடி பாடியும், ஆடியும் பக்திப் பரவசத்தில் மூழ்கும் அம்மையாருக்கு, வேதங்களையும் உபநிடதங்களையும் பிரம்ம சாஸ்த்திரம், உபநிடதம், நிகண்டு விவேக சூடாமணி பகவத்கீதை பற்றிய கருத்தெல்லாம் இடைஇடையே தன் குருநாதர் சொல்லித் தந்தார். ஆனால் நாயன்மார்கள் நமக்கருளிய தமிழ் வேதம் பற்றித் தெரியவில்லலையே என்று ஸ்ரீமான் குழந்தைவடிவேலு கூறினார். ஞானப்பாலுண்ட ஞானக்குழந்தையல் லவா, ஸ்ரீமான் குழந்தை வடிவேலு திருமுறைப் பெருவிழாவினையே நடாத்தி முடித்தார்.

பக்திமார்க்கத்திற்கு பாத்திரமான பூசலார் நாயனார் பரமேசுவரனுக்கு மனதிலே கோவில் கட்டி மகா கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்ததை புராண வாயிலாக அறிவோர் அவ்வாறே குருவின் நாமம் தவிர்ந்த வேறொன்றையும் சந்திக்காது இருப்பதற்கு மன ஒருமைப்பாட்டின் அவசியத்தை உணர்ந்தார். ஸ்ரீமான் குழந்தைவடிவேலு அஷ்டாங்க யோகத்தில் கூறப்படும் தியானம் என்றபடி கற்றுணர்ந்த குழந்தையின் மனதில் ஓர் போராட்டம் அருணகிரிநாதர் பாடிய முருகனை அரைநிமிடம் தியானித்தால் போதும் என்று வாழாது குரு உபதேசத்தில் உருவேறப் பெற்றார். இறைவனைக் குருவடிவில் காணலாம். முருகனே குருவாக வந்து என்னை வழிநடத்துகிறார் என உணர்ந்து அக்குருவைத் தியானமே சிறந்த உபாயம் என மாதாஜியும் கூற பக்திமார்க்கத்தில் நின்ற குழந்தை ஞானமார்க்கத்தில் பிரவேசித்தார். இந்நிலை எளிதில் யாருக் கும் ஏற்படாது. மாதாஜி போதனையால் மாதவம் பெற்றுக்கிடந்ததன் பலன் எனலாம். சுவாமி விவேகானந்தரின் அவதாரத்தின் வருகைக்காகவும் சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் காத்திருந்தார். இந்து மதத்தின் பெருமையை அகில மெலாம் பரப்ப சுவாமி விவேகானந்தருக்கு மூலவேராக இருந்தவர் சுவாமி இராம கிருஷ்ணர். அதுபோல குருவால் ஈர்க்கப் பட்ட ஸ்ரீமான் குழந்தை வடிவேலு தான் அடைந்து அனுபவிக்கும் ஆனந்த ஊற்றை அனைவரும் பருகவேண்டுமென விழைந்தார். அதற்கு ஏற்ற உபாயமாக ஆச்சிரம வளாகத்தினுள் ஒரு தியான மண்டபம் அமைக்கவேண்டும் என விரும்பினார். (தொடரும்..

உ

# சந்நிதியான்

- ந.அரியரத்தினம் -



புதூா் நாகதம்பிரான் ஆலயம் வவுனியா நகரிலிருந்து வடக்கே ஏறத்தாழ 30 கிலோமீற்றர் தூரத்தில் இயற்கைச் சூழலில் அமைந்திருக்கும் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஆலயமாகும். இங்கே வருடாவருடம் வைகாசிமாதம் நடைபெறும் பொங்கல் திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெறுவதுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் வன்னிப்பகுதியின் பல் வேறு இடங்களிலிருந்தும் ஒன்றுகூடி இந்தப் பெருநாளை பக்திப்பரவசத்துடன் அனுசரித்து வருகின்றனர். கிராமியச் சூழலில் பெரும் பாலும் பாமரமக்கள் ஒன்று கூடுகின்ற இந்த ஆலயத்தில் காவடி ஆட்டம் தீ மிதித்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் சந்நிதி ஆலயத்தைப்போல குறிப்பிட்ட பரம்பரையைச் சேர்ந்தவர்களே இந்த ஆலயத

ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு பலவீனம் உண்டு.

திற்கு பூசைகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்ல புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் பூசை செய்கின்ற பூசகர்கள் சந்நிதி ஆலயத்துடன் நீண்டகாலத் தொடர்புள்ளவர்களாவும் காணப்படுகின்றனர்.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் பூசை செய்கின்ற பூசகர்கள் சந்நிதியானிடம் உள்ள நம்பிக்கை காரணமாக தமது குடும்பத்தில் நிகழும் சகல விதமான செயற்பாடுகளின் பொழுதும் சந்நிதியானை மனதில் நிறுத்தி செயற்படும் வழக்கத்தை கடைப்பிடித்து வருகின்றனர். முக்கியமாக மருந்தினால் மாற்ற முடியாத பல வருத்தங்களை சந்நிதிக்கு வந்து சந்நிதியானுடைய கருணையினால் மாற்றிச்சென்றுள்ளதை எம்மால் அறிய முடிகின்றது.

1996 ஆம் ஆண்டு புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பூசகர் குடும்பத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் தனது மோசமான வருத்தத்தினால் துன்பப்பட்டு இறுதியில் அந்த வருத்தத்தைத் தீர்ப்பதற்காக சந்நிதியானிடம் வந்து சேர்ந்தார்கள். இந்த அம்மையார் சந்நிதி ஆலயத்தின் கிழக்குத்திசையில் உள்ள பிரதான வீதியில் பிரக்கிராசி ஐயர் வீட்டிற்கு முன் உள்ள அரசமரத்துடன் இணைந்துள்ள அந்தக் கட்டிடத் தொகுதியில் தங்கியிருந்தார்கள்.

ஆற்றில் நீராடி ஆலயப்பூசைகளில் பங்குகொண்டு சந்நிதியானைத் தியானித்தவண்ணம் அவனது நினைவுடனேயே தினமும் தனது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு அந்த அம்மையார் பலநாட்கள் ஆலயத்தில் தங்கியிருந்து ஆலயத்தொண்டுகள் செய்து சந்நிதியானை உண்மையான விசுவாசத்துடன் வணங்கிக் கொண்டிருந்த நிலையிலும் அவரது வருத்தம் சுகமடையவில்லை. அதுமட்டுமன்றி நோயின் காரணமாக அவர் தினமும் அனுபவித்து வரும் உடல்வேதனையும் குறைவடையவில்லை.

இவ்வாறு வேதனையுடன் தங்கியிருந்த அந்த அம்மையாருக்கு மேலும் வேதனை ஏற்படக்கூடிய நிகழ்வுகளே அங்கே ஏற்பட்டுக்கொண்டிருந்தது. நாம் ஏற்கனவே குறிப்பிட்ட அந்த அரசமரக் கட்டிடத்தொகுதியில் தங்கியிருந்த மேற்படி அம்மையார் ஒருநாள் காலையில் நித்திரைவிட்டு எழுந்தவுடன் தற்பொழுது பூசகராகக் கடமையாற்றும் சின்னக்குட்டி ஐயா என அழைக்கப்படும் திரு த. அகிலேஸ்வரஐயாவின் தாயாரான திருமதி த. இராசமணி அவர்களிடம் சென்றடைந்தார்கள்.

மிகுந்த கவலையுடனும், விரக்தியுடனும் காணப்பட்ட அந்தப்பெண் சின்னக்குட்டிஐயாவின் தாயாரான திருமதி த. இராசமணி அவர்களிடம் சென்று பின்வருமாறு தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்கள். “இதற்கு முன்பு பலமுறை சந்நிதியானிடம் வந்து வணங்கி என்னுடைய வருத்தத்தைப் போக்கி திருப்தியுடனும் நின்மதியுடனும் வீடு திரும்பியுள்ளேன். இந்த முறை எனது வருத்தத்தைத் தீர்ப்பதற்காக சந்நிதியானிடம் வந்து பலநாட்கள் ஆகிவிட்டன எனது வருத்தம் சிறிதும் தீரவில்லை. எனது உடல் வேதனையும் குறையவில்லை நான் துன்பப்பட்டுக்

கொண்டே இருக்கின்றேன் அது மட்டு மல்ல இன்று இரவு நீ இங்கே இருக்க வேண்டாம் உடனே ஊருக்கு போ என்று முருகன் சொல்லிவிட்டார். இவ்வாறு சந்நிதியான் கூறியபின் நான் என்ன செய் வேன் யாருடைய உதவியை நாடுவேன் என்று கண்ணீர் மல்க தனது பரிதாப நிலையை எடுத்துக் கூறினார்கள். அத் துடன் நான் தனித்து நடமாட முடியாத உடல்நோயுடன் இருக்கும்பொழுது முருகப்பாவும் நீ உடனே ஊருக்குப்போ எனக் கூறியுள்ளதால் இந்த உடல் நோயுடன் இவ்வளவு தூரம் இந்த கொம் படிப்பாதையூடாக தனித்து பிரயாணம் செய்து எவ்வாறு ஊருக்குப் போகமுடி யும் நீங்கள் தான் எனக்கு எப்படியாவது உதவவேண்டும் என்று மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்கள்."

மருதர் கதிர்காமர் பரம்பரையைச் சேர்ந்த சின்னக்குட்டிஐயாவின் தாயாரான திருமதி த. இராசமணி அவர்கள் சந்நிதி யானிடம் ஆழமானபக்தியும் அசையாத நம்பிக்கையும் கொண்டவர். சந்நிதி யானது அருட்கடாட்சத்தைப் பெற்றிருப் பதுடன் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை ஆலயத்திலும் ஆலயச் சூழலிலுமே போக்கிக்கொண்டிருப்பவர். இத்தகைய இயல்புகள் கொண்ட திரு மதி த. இராசமணி அவர்கள் சந்நிதி யானை நாடிவந்த அந்த புதூர் நாகதம் பிரான் ஆலயத்தைச் சேர்ந்த அம்மை யாரது பரிதாபநிலையைக் கண்டு மனம் இரங்கினார்கள். அந்த அம்மையாரது துன்பத்தைப்போக்குவது தனது கடமை மட்டுமல்ல அது சந்நிதியானுக்குச் செய்கின்ற ஒரு தொண்டு எனவும் உணர்ந்து கொண்டார்கள். ஆனாலும் எவ்வாறு தன்னால் அந்த அம்மையாருக்கு உதவமுடியும் என்று குழப்பமடைந்தார் கள்.

இறுதியாக தனது மகன் திரு த. அகிலேஸ்வரஜயாவை அழைத்து அந்த அம்மையாரின் சொந்த இடமான புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு கூட்டிச் சென்று அங்கே அவரைச் சேர்ப்பிக்குமாறு விநயமாகக் கேட்டுக்கொண்டார்கள். ஆலயத்தில் பூசகராகச் செயற்படுவதை தொழிலாக மட்டுமன்றி ஒரு தொண்டாக நினைத்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் சின்னகுட்டிஐயா என அழைக்கப்படும் திரு த. அகிலேஸ்வரஜயா அவர்கள் தாயின் வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். ஆபத்தானதும் மிகுந்த சிரமங்கள் நிறைந்ததுமான கொம்படிப் பாதையூடாக அந்த அம்மையாரை அழைத்துச்சென்று புதூரில் அவரது உறவினர்களிடம் சேர்ப்பித்து விட்டு அடுத்தநாள் வீடு திரும்பினார்கள்.

என்ன ஆச்சரியம் இந்த சம்பவம் இடம்பெற்று சரியாக இரண்டாம்நாள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அதன் சுற்றாடல் பகுதி மற்றும் தொண்டைமானாற்றின் ஏனைய இடங்களைக் குறிவைத்து சுப்பர்சொனிக் குண்டுவீச்சு விமானம் குண்டுகளைப் பொலிந்ததுடன் பலாலியில் இருந்தும் ஷெல் வீச்சுக்களை இராணுவத் தினர் மேற்கொண்டனர். இதனால் ஆலயத்திலும் - ஆலயச்சூழலிலும் தங்கி யிருந்த பலரும் அவ்விடத்தைவிட்டு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆலயத்தின் பூங்காவன மண்டபம் மற்றும் ஆலயத்தின் பலபகுதிகள் சேதமாக்கப்

முதலில் சிந்தித்து பிறகு பேசவேண்டும்.

பட்டதுடன் பலர் காயமடையும் நிலையும் ஏற்பட்டது.

இந்த நிலையில் தனது இருப் பிடத்திற்கு சென்றதனால் புதூர் நாகதம் பிரான் ஆலய பூசகர் பரம்பரையைச் சேர்ந்த அந்த அம்மையார் இந்த அசம் பாவிதங்கள் எதற்கும் உட்படாது சந்நிதி யான் கருணையினால் காப்பாற்றப்பட்டார் கள். அதுமட்டுமல்ல அவரது வருத்தமும் படிப்படியாக குறைவடைய ஆரம்பித்தது. சிலகாலத்தின் பின்பு பூரணசுகமடைந்த நிலையில் சந்நிதிக்கு வந்து சந்நிதியான் செய்த அற்புதத்தை வியந்து சந்நிதி யானுக்கு விஷேடபூசைகள் செய்து உள்ளம் உருகி வழிபாடு செய்தார்கள். அத்துடன் அடையாளம் காணமுடியாத அளவுக்கு திடகாத்திரமாகத் தோற்ற மளித்த அந்த அம்மையார் சின்னக்குட்டி ஐயாவையும் அவரது தாயாரையும் நாடிச் சென்று சந்தித்து தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்கள். அனைவரும் சந்நிதியானது அற்புதத்தை வியந்து ஆனந்தப்பரவசமடைந்தார்கள்.

ஆம் சந்நிதிமுருகன் அன்னதானக் கந்தன் மட்டுமல்ல தன்னை நாடிவருகின்ற உண்மையான அடியவர்களுக்கு அற்புதங் கள் நிகழ்த்தி அவர்களை ஈடேற்றுகின்ற அற்புதக்கந்தனாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றான்.

ஓம் முருகா!

---

## பீஷ்மரின் கண்ணீர்

பீஷ்மர் அம்புப் படுக்கையில் கிடக்கையில் பாண்டவர்கள் கிருஷ்ணனுடன் அவரைக் காண வந்தனர். அப்போது அவர் கண்களில் நீர் ததும்பக் கண்ட அர்ச்சுனன், "கண்ணா! இது என்ன விந்தை! அஷ்டவசுக்களில் ஒருவரும், மஹாஞானியும் நிகரற்ற வீரருமாகிய நமது பாட்டனார் பீஷ்மரே மாயையினுள் உட்பட்டு சாகுந்தருவாயில் கண்ணீர் விட்டு மனம் கலங்குகின்றாரே!" என்றான். இதையுணர்ந்த பீஷ்மர், 'கண்ணா! நான் அதற்காக அழவில்லை என்பது உனக்குத் தெரியும். நீயே சாரதியாகவும், தோழனாகவும் உடனிருந்தும், இவர்களுடைய துன்பத்துக்கு முடிவில்லையே என்று நினைக்கவும், உன்னுடைய லீலைகளை எவரே அறியவல்லார் என்ற எண்ணந்தோன்றி என் கண்களில் நீர் ததும்பியது." என்றார்.

---

## மனம் தூய்மையாகட்டும்

ஒளி சிந்தவேண்டிய மின்விளக்கில் அழுக்கேறி, ஒளி மங்கலாகத் தோன்றினால் அது மின்சாரத்தின் தவறல்ல. வானொலிப்பெட்டி சரியாகப் பாடாவிட்டால் மின்சாரம் இசையை விரும்பவில்லை என்று கொள்ளக்கூடாது. நம்முள் இருக்கும் இறைவனின் அருள், நமக்குக் கிடைக்கவில்லையென்றால் அது இறைவனின் குறையல்ல. நம்முடைய மனத்தில் உள்ள மாசுகளை நீக்கி, தூய்மைப்படுத்திக்கொண்டால், அங்கே இறைவன் ஒளிதருவான். பிரசன்னமாகிப் பாதுகாப்பான்.

முதலில் தகுதி பிறகுதான் விருப்பம்.

உ

(தொடர்ச்சி..

## 01-08-2004இல் இருந்து

## நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| கு. கனகரெத்தினம் ஆசிரியர் | அச்சுவேலி | 5000. 00 |
| சிவகுமார் | அளவெட்டி | 5000. 00 |
| ச. சிதம்பரேசன் | தும்பளை | 7000. 00 |
| பு. நாகமுத்து | கரணவாய் கிழக்கு | 1000. 00 |
| செ. அரியானந்தம் கலட்டிலேன் | கோண்டாவில் | 500. 00 |
| இ. புவனேந்திரன் | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| ஸ்ரீ நதியா நகைமாடம் ஸ்ரான்லி வீதி | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| அ. நிர்மலதாஸ் | கொடிகாமம் | 3000. 00 |
| இ. ஸ்ரீகாந்தன் | கொக்குவில் | 2000. 00 |
| த. வேலாயுதம் மூலம் திருமதி Dr. ஜெயந்தி லண்டன் | | 10,000. 00 |
| கனகம்மா ஸ்ரீகரன் | கொக்குவில் கிழக்கு | 18,000. 00 |
| மு. கணேஸ் இணுவில் | | 1மூடை அரிசி |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| Dr. G. பவானி | யாழ்ப்பாணம் | 10,000. 00 |
| வை. தங்கப்பழம் | சுவீஸ் | 7000. 00 |
| இராமநாதன் பரந்தாமன் தாவடிச்சந்தி | கொக்குவில் | 5000. 00 |
| ஆறுதிருமுருகன் மூலம் மு. பாலசுப்பிரமணியம் | அமெரிக்கா | 10,000. 00 |
| Dr. கௌரி சிவ ஓம்பகவான் | அமெரிக்கா | 100 டொலர் |
| சி. பாலயோகன் | லண்டன் | 30 பவுண்ஸ் |
| திரு திருமதி கந்தசாமி | லண்டன் | 20 பவுண்ஸ் |
| சுவாமி சித்ருபானந்தா ஸ்ரீ சாரதா ஆச்சிரமம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| சு. மணிவாசகம் | அவுஸ்திரேலியா | 10,000. 00 |
| பொ. மாணிக்கவாசகர் (பொன்வயல்) | நெதர்லாந் | 2000. 00 |
| மா. மீரா | சாவகச்சேரி | 3000. 00 |
| நாகராஜா ஜெயபாஸ்கரன் | சங்கானை | 8000. 00 |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி | 3000. 00 |
| திருமதி மயில்வாகனம் நாகேஸ்வரி | நவிண்டில் | 4000. 00 |
| த. வேலுச்சாமி இன்பர்சிட்டி | பருத்தித்துறை | 1000. 00 |
| ப. ஆதிரை | கனடா | 5000. 00 |
| சுந்தரலிங்கம் மாரீசன் கூடல் | இளவாலை | 3000. 00 |
| M. மகேஸ்வரன் உரும்பராய் கிழக்கு | உரும்பராய் | 2000. 00 |

பொறுமையும் நேர்மையும் சக்தி வாய்ந்தவை.

| | | |
|---|---|---|
| சு. முருகையா | கொழும்பு- 13 | 3000. 00 |
| கதிர்காமநாதன் நவிண்டில் | பருத்தித்துறை | 3000. 00 |

## 2005ஆம் ஆண்டு உற்சவம் (05-08-2005) தொடக்கம்

| | | |
|---|---|---|
| A. யோகரெத்தினம் | மலேசியா | 10,000. 00 |
| S. நேசரத்தினம் | லண்டன் | 5000. 00 |
| ந. ஜவர்கலால்நேரு குடும்பம் | லண்டன் | 20,000. 00 |
| N. வரதீசன் | லண்டன் (கொழும்பு) | 5000. 00 |
| K. கனக சபேசன் | கனடா | 16,500. 00 |
| பொ. சந்திரமோகன் ஓஷன்ரேட்ஸ் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| சிவதொண்டன் நிலையம் K.K.S வீதி, | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| சபா ரேடேஸ் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| சி. மகாலிங்கம் இராசவீதி | நீர்வேலி | 3மூடை அரிசி |
| சு. இராசகோபால் | ஊரெழு கிழக்கு | 1மூடை அரிசி $\frac{1}{2}$ மூடை பருப்பு |
| பொ. வெங்கடேஸ்வரன் | வல்வெட்டித்துறை | 4000. 00 |
| Dr.R. பாக்கியநாதன் கல்வியங்காடு | பொன்னையா வைத்தியசாலை | 1000. 00 |
| த. விக்னேஸ்வரன் கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சிவா பிரதேர்ஸ் திருநெல்வேலி | | 1மூடை அரிசி |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| வேணி ஸ்ரோர்ஸ் மூலம் கோகுல் | கொழும்பு | 10புட்டி ராசாத்திநாடு |
| N. பரமானந்தம் | கனடா | 10,000. 00 |
| கிருஷ்ணா பீடாக்கடை வண்ணார்பண்ணை | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி, 1மூடைசீனி |
| தி. துவாரகேஸ்வரன் | யாழ்ப்பாணம் பொருட்கள் வகையில் | 10,000. 00 |
| ஸ்ரீதேவி அரிசிஆலை | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| த. ரவீந்திரகுமார் இருபாலை | கோப்பாய் | 10,000. 00 |
| N. ஜெயரட்ணராஜா | இளவாலை | 1மூடை அரிசி |
| ம. ஸ்ரீதரன் | வல்வெட்டித்துறை | 20,000. 00 |
| திருமதி சி. சொக்கலிங்கம் | கொழும்பு | 1000. 00 |
| Dr. சி. கதிரவேற்பிள்ளை | கரவெட்டி | 1000. 00 |
| க. கமலக்கண்ணன் கொம்மந்தறை | உடுப்பிட்டி | 5000. 00 |
| கு. குலேந்திரன் | அச்சுவேலி | 5000. 00 |
| கு. மகேந்திரன் | அச்சுவேலி | 2000. 00 |
| வே. சிவபாதராசா சேகர் இல்லம் | வதிரி | 1மூடை அரிசி |

(தொடரும்...

துக்கத்தை மறக்கச் செயலில் ஈடுபடவேண்டும்.

# ஞானச்சுடர்
# வாசகர் போட்டி – 2005
# வினாக்கள்

1 நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று சிவனுடன் வாதிட்ட செந்தமிழ்ப்புலவர் யார்?
2 தேற்றாங்கொட்டை கலங்கிய நீரைத் தெளியவைப்பது போல எம் உள்ளத்தைத் தெளிய வைப்பது யாது?
3 சிவம் கைகூடப்பெறுவதற்கு மூலம் எது?
4 கிருஷ்ணாவதாரம் நிகழ்ந்த திருநாள் எது?
5 நிறைமொழி மாந்தர் யார்?
6 முப்பொருள்களுக்கும் இடையிலான பேதம் யாது?
7 மூலஸ்தானத்தை மறைத்திருந்த நந்தியை விலகச்செய்தவர் யார்?
8 பாஞ்சசன்ய அவதாரமாக உதித்தவர் யார்?
9 மருதர் கதிர்காமர் போலவே கதிர்காமத்தில் இளைஞன் வடிவிற்காட்சி கொடுத்தருளிய முருகப்பெருமானிடம் வேலொன்று பெறும் பாக்கியம் பெற்றுள்ள இளம் யுவதி யார்?
10 திருதராட்டினன் காந்தாரி குந்திதேவி ஆகிய மூவரும் எங்ஙனம் சொர்க்கம் அடைந்தார்கள் என்பதனைப் பாண்டவர்களுக்குக் கூறியவர் யார்?
11 இறைவனின் பேரருளைப் பரிபூரணமாகப் பெறுவதற்கு உதவுவன யாவை?
12 'யானெனது என்றற்ற இடமே திருவடி மோன பரமானந்தம் முடி' என்ற கந்த தத்துவம் தரும் நூல் எது?
13 சாதகனது ஆத்மீக முயற்சிகள் யாவற்றையும் வீணாக்கி விடுவது எது?
14 சதுர்முகன் போல் விதி செய்தவன் யார்?
15 மும்மூர்த்தி யாவர்?
16 யோக மார்க்கத்திலும் பார்க்க மேலானது எது?
17 கண்களை வசப்படுத்திக் கொண்டால் யாவுமே சாத்தியமாகும் என்று கூறியவர் யார்?
18 இறைவன் உரோமச முனிவருக்காகத் திருக்கைலைச் சிகரமொன்றைத் தோற்றுவித்தருளிய திருத்தலமெது?
19 தாயுமானவரின் ஞானகுரு யார்?
20 அம்பிகையால் ஆட்கொள்ளப்பெற்றுத் தெய்வீக அம்சம் பொருந்திய குழந்தையை அடித்துவிட்டேனே என்று மனங்கலங்கி ஒரு வாரம் விரதம் பூண்டு, முருகனை வழிபட்டு உணவருந்தியவர் யார்?

21 அம்மா எந்த இடம் உன்னை இகழ்கின்றதோ அங்கிருந்துதான் நீ தவம்முடிக்க வேண்டும் அதுதான்நீ கொண்ட தவத்திற்கும் உனக்கும் பெருமை என்று ஞானவாக்கை பெற்றவர் யார்? வாக்கினை அருளியவர் யார்?

22 இவ்வாண்டு 101ஆவது ஜனன தினம் கொண்டாடப்பெற்ற சுவாமிகள் யார்?

23 நமது நாட்டிலான ஆறுபடைவீடுகளில் மூலத்தலமாக விளங்குவது எது?

24 மன அலைச்சலுக்கு உவமையாகக் கூறப்படுவது எது?

25 ஐந்து வயதுவரை வாய்பேசாதிருந்த குமரகுருபரர் செந்திலாண்டவனின் திருவருளால் ஊமைத்தன்மை நீங்கப் பெற்றதும் திருவாய் மலர்ந்தருளிய பிரபந்தம் எது?

---

## வாசகர் போட்டிக்கான விதிமுறைகள்

1 போட்டியில் எவரும் பங்கு பற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்பட வேண்டும்.

2 வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்பட வேண்டும்.

3 விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோப்பிரதி எடுப்பதோ அனுமதிக்கப்படவில்லை.

4 விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 03.01.2006 இற்கு முன்பு தபால் மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

காசுக்கட்டளை

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
*T.P. NO. 021-2263406*

காசோலை

**செ. மோகனதாஸ்**
**க.இல.** *P. 7481*
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

உ

# மார்கழிமாத வாராந்த நிகழ்வுகள்

02-12-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- ஆனந்த ஒளிவீசும் அண்ணாமலை
வழங்குபவர்:- தி. சிவதெட்சணாமூர்த்தி
(உதவிக்கல்விப் பணிப்பாளர் தேசிய இளைஞர்சேவைகள் மன்றம்)

---

09-12-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- பக்திப்பாடல் (புல்லாங்குழல் இசை)
வழங்குபவர்:- S. S. றஜீந்திரன்
(பக்கவாத்திய சகிதம்)

---

16-12-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- பெரியபுராணம் (தொடர்)
வழங்குபவர்:- அ. குமாரவேல் (சிரேஸ்ட விரிவுரையாளர்)
(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

23-12-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- முருகநாம பஜனை
வழங்குபவர்கள்:- முருகன் அடியார்கள்

---

30-12-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

### மார்கழி-2005

வெளியீட்டுரை:- S. தேவதாசன் J.P
மதிப்பீட்டுரை:- ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

**ஜனவரி**
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
26.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

**பெப்ரவரி**
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

**மார்ச்**
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

**ஏப்ரல்**
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்,
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

**மே**
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

**ஜூன்**
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

**ஜூலை**
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

**ஆகஸ்ட்**
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

**செப்ரெம்பர்**
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

**ஒக்ரோபர்**
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

**நவம்பர்**
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

**டிசம்பர்**
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005